# தென்றல்

கிழமை இதழ்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு—அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 7 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1991, கார்த்திகை 4 (19-11-'60). சனிக்கிழமை | இதழ் 23

என் இனிய நண்பர்களே!

மீண்டும் கொஞ்சநேரம் உங்கள் இருதயங்களையும் காதுகளையும் திறந்து வைத்துக் கொள்ளுங்கள்.

மீண்டும அந்த வேடிக்கை மனிதன் உங்களுக்குச் சில செய்திகளைச் சொல்ல இருக்கிறான்.

யார்மீதும் அவன் குற்றம் சாட்ட வில்லை.

நீங்கள் சம்பந்தப்பட்டுள்ள எந்தக் காரணங்களைக் கொண்டும், அவன் தன் முடிவுகளைச் செய்ய வில்லை.

எப்போதும் அவன் எதையாவது சொல்லிக் கொண்டிருப்பது வழக்கம்.

அந்த எதிலும், ஏதாவது சில உண்மைகள் இருப்பதும் வுழக்கம்.

கேளுங்கள்!

காலங்களால் பிரிக்கப்பட்ட அவனது சமுதாயத்தின் ஒரு பகுதி, கடல் கடந்து ஓலமிட்டது.

கிழக்கு வானத்தைப் பார்த்துப் பார்த்து, அங்கே உதிக்கும் கதிரவன் தன் வாழ்விலும் உதிப்பான் என்று, அந்தப் பகுதி எதிர்பார்த்து நின்றது.

தொல்லைகள் தோன்றும் போதெல் லாம், கீழ்த் திசையையே பார்த்துப் பார்த்து, அது பெருமுச்சு விட்டது

"நீங்கள் என்ன செய்யப் போகிறீர் கள்? எங்கள் கரங்கள் கட்டப்பட்ட தையும். கைகள் வெட்டப்பட்டதையும் நீங்கள் கவனிக்க வில்லையா?

இதோ பாருங்கள்!

உங்கள் சகோதரர்களின் இரத்தம், கடற்கரை மணலைச் சிவப்பாக்கிக் கொண்டிருக்கிறது.

ஒருவரையொருவர் அணைத்தவாறு நாங்கள் அலறும் குரல் உங்களுக்குக் கேட்கவில்லையா?"—என்று அந்தப் பகுதி குமுறிக்கேட்டது.

"எங்களுக்குப் பசிக்கிற"தென்று பக்கத்திலிருந்தே ஒரு குரல் ஓல மிட்டது.

அவன் இவற்றைக் கவனித்தான்.

கவனித்தால் பேசுவதற்கு விஷயம் கி[illegible]க்கு மென்று, அவன் கவனிக்க [illegible]லை.

இந்த அவலத்தையும் ஓலத்தையும் பற்றிப் பாடினுல், பாட்டுக்கு மதிப் பேறும் என்றும் அவன் பாடவில்லை.

சராசரி மனிதர்களில் ஒருவனுகவே, அவன் அவற்றைக் கவனித்தான்.

நிலமை என்னவென்று அவனுக்குப் புரிந்தது.

நியாயம் எந்த வழியில் கிடைக்கு மென்றும் அவனுக்குத் தெரிந்தது.

பாம்பைக் கம்பால் அடிக்க வேண்டும்.

வலைவீசியும், தூண்டிலிட்டும் மீனைப் பிடிக்க வேண்டும்.

## கண்ணதாசன்

பறவையைக் கண்ணிவைத்து மடக்க வேண்டும்.

ஆனுல்,

தூண்டிலிட்டுப் பாம்பைப் பிடிக்க முடியாது.

கம்பாலடித்துப் பறவையைப் பிடிக்க முடியாது.

பயங்கர மிருகங்களைக் கொல்வதற் குப் பயங்கர ஆயுதங்கள் தேவை.

அற்புதமான பாடல்களைப்பாடி, புல் லாங்குழலில் இனிய கீதங்களை வாசித்து, வீணையை மீட்டி யானையை மடக்கிய சரித்திரத்தை அவன் படித்த தில்லை.

கூண்டில் அடைபட்டபுலி, வித்தைக் காரனைக் கொஞ்சியும், கெஞ்சியும் விடுதலை பெற்றதில்லை.

தாமரை மலர்கள் மலர்ந்திருக்கும் காட்சியையும், மகிழ மலர்கள் பூத்துக் குலுங்கும் அழகையும், கன்னி வயதிலேயே நரைத்துவிட்ட கூந்தலைப் போல், மலையருவி விழும் சிறப்பை யும், பெண்களைவிட்டுப் பறந்துவந்த கண்களைப்போல், வண்டுகள் பறந்து திரியும் அலங்காரத்தையும், வந்தது தான் வந்துவிட்டோம், வளர்ந்துதான் பார்ப்போமே என்று பனையும், தென்னை யும், வான்பார்த்து நிற்கும் ஒய்யாரத் தையும், ஓவியர்கள் கண்டு ஓவிய மெழுதலாம்.

கவிஞர்கள் கண்டு காவியம் பாட லாம்.

ஓய்வு மிகுந்தவர்கள், கொஞ்சம் உட்கார்ந்தும் ரசிக்கலாம்.

கணையும் வில்லும் கையிலே தாங்கி, "புலியெங்கே? சிங்கமெங்கே??" என்று

(3-ம் பக்கம் பார்க்க)

# உயிர்க் கவிதை

துறையூர், ந. அலி. பி, ஏ.

மண்ணுறங்கும், மலையுறங்கும் வான கத்தில்
மதியுறங்கும், ஒளிவீசும் மீனு றங்கும்,
எண்ணுறங்கும், எழுத்துறங்கும், பேதை நெஞ்ச
இருள்கூடக் கண்ணுறங்கும் இரவு நேரம்
கண்ணுறக்கம் இல்லாமல் தவித்த வண்ணம்
கண்மூடிக் கிடந்திட்டேன் படுக்கை மீது
பெண்ணணங்கு மெதுவாயென் அருகே வந்து
பேசாத சிலையாக நின்றி ருந்தாள்.

கற்பனைகள் சிறகடித்துப் பறந்து செல்லும்
கரைகாணு உலகத்தில் தேரில் ஏறி
நிற்காமல் பறந்திட்டேன், மனையாள் நின்ற
நிலைகூட மறந்திட்டேன், அடிகள் சோர்ந்து
"கற்சிலையா? மரமாநீர்? கனியைக் கண்டும்
கண்மூடித் தூங்குகிறீர்" என்று கூறி
விற்புருவத் தாளென்றன் மேனி தொட்டாள்
வெடுக்கென்று நானெழுந்து தலைநி மிர்ந்தேன்.

"கவியொன்று நான்பாட எண்ணம் கொண்டு
கற்பனையில் ஆழ்ந்திருந்தேன், ஆனுல் நீயோ
கவிழ்த்திட்டாய் பாற்குடத்தை, கற்ப னையைக்
கலைத்திட்டாய், ஓவியத்தை அழித்து விட்டாய்"
தெவிட்டாத தேன்கவிதை போல நின்ற
சித்திரத்தாள் முகம்பார்த்துக் கணையை விட்டேன்
கவிழ்ந்ததலை நிலம்நோக்க அவளும் மெல்லக்
காலடிமேல் அடிவைத்து நடந்து சென்ருள்.

அழகான கவிபாடி முடித்த பின்னர்
அண்ணுந்து பார்த்தேன்பெண் மயிலங் கில்லை,
எழுந்தேன்என் அணைவிட்டு, முன்னுற் சின்ன
ஏரியென நீர்தேங்கி நின்ற தாங்கே
அழுதிட்ட மனையாளின் கண்ணீர் தானே?
யாருக்கும் தெரியாமல் பாயு மாறே?
எழுதாத ஓவியத்தைத் தேட லானேன்
இருவிழிகள் நீர்சோரப் படுத்தி ருந்தாள்

உயிர்க்கவிதை உயிரற்றுக் கிடக்கக் கண்டேன்,
உயிர்தந்து நான்யாத்த கவிதை என்றன்
செயல்கண்டு சிரிக்கின்ற நிலையை எண்ணித்
தேம்புகிற மயிலருகே நெருங்கிச் சென்றேன்
"குயில்மொழியே" என்றேன்பின் அணைத்தேன் வானக்
குளிர்நிலவோ தன்கண்ணில் கடலைக் காட்டி
உயிரற்ற கொடிபோலச் சாய்ந்தாள், பெண்மை
உயர்பண்பை மனத்தெண்ணி வருந்த லானேன்.

சிறுகதை :

# துக்து என் காதலி.

என். தாமோதரன்.

அஸ்ஸாம் மாநிலத்தின் கோடை வாசஸ்தலமான டார்ஜிலிங் நகரத்தில், ஒரு பெரிய தேயிலை நிறுவனத்தில் வாகன ஓட்டியாக வேலை செய்து வந்தேன் நான். அடிக்கடி வெளியூர்களுக்குப் போய் வரும் நிர்ப்பந்தங்கள் ஏற்படும். அப்போதெல்லாம் நிறையக் கைப்பணம் கிடைப்பதுடன், அதிக உடல் சிரமமும் இருக்கும். ஆனால் புதிய புதிய இடங்களையும், மக்களையும் பார்ப்பதில், ஒரு தனி ஆர்வமும், ஆசையும் மிகுந்திருக்கும். புதிய அனுபவத்தின் போது நாமும் மிகவும் உற்சாகத்துடனும் தெம்புடனும் இருப்பது வழக்கம். என்னுடைய வாகனம் ஓட்டும் அனுபவத்தில் அஸ்ஸாம் மாகாணத்தைச் சுற்றியுள்ள ஊர்களையும், அடுத்துள்ள, பல நகரங்களையும் பார்த்துப் பார்த்துச் சலிப்புத்தான் ஏற்பட்டிருந்தது எனக்கு! காரணம்; சில வேளைகளில் மாதக் கணக்கில் ஊர் சுற்றிக் கொண்டிருப்பதே!

அன்று, மேற்கு வங்காளத்திலுள்ள காசிம் பஜாருக்குப் போக வேண்டுமென்று உத்தரவு! இதற்குமுன் காசிம் பஜாருக்குப் பல தடவை போய் வந்திருந்தேன். ஆதலால் எனக்கு அதிக உற்சாகமும், ஆவலும் இல்லாமலிருந்தது ஆச்சரியமில்லைதான்! ஆனால், வண்டியுடன் வரும், இரண்டு புதிய கூலிகள், ஒரு துணைக்காரோட்டி, ஆகியவர்கள் மிகவும் குதூகலத்துடன் என்னிடம் பேசிக்கொண்டிருந்தார்கள். போகும் வழியைப்பற்றியும், அங்கெல்லாம் முக்கியமாகப் பார்க்க வேண்டிய இயற்கைக் காட்சிகளைப்பற்றியும், மலை, மடு, காடு, வயல்கள், அருவி, ஆறு போன்ற உள்ளம் கவரும் பலவற்றைத் துருவித் துருவிக் கேட்டுக்கொண்டே இருந்தார்கள். நான், அவர்களுக்குத் தக்க பதிலைஅவர்கள் மகிழும்படிகூறிக்கொண்டுவந்தேன். அன்று காலை நான்கு மணி சுமாருக்கு, எங்கள் லாரி ஆயிரக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள தேயிலைப் பெட்டிகளை ஏற்றிக்கொண்டு வங்காளத்தை நோக்கிப் புறப்பட்டது. நானும், எனக்குத் துணையாக வந்த உதவி டிரைவர், சுமார் இருபது வயது மதிப்பிடத்தக்க இளைஞன், ஒரு வியாபாரத் தூதுவர், (அவர் எனக்கு அதிகப் பழக்கமில்லாதவர். சுமார் நாற்பது வயது மதிக்கலாம்) இரண்டு கூலிகள், ஆக ஐந்து பேர்கள் அந்த வாகனத்திலிருந்தோம்,

டார்ஜிலங்கைவிட்டுப் புறப்பட்டு, உத்தரப் பிரதேசத்தின் கிழக்குக் கோடியின் ஓரமாகவும், கிழக்குப் பாகிஸ்தானின் மேற்கெல்லைக் கோட்டின் ஓரமாகவும் உள்ள ஒரு இடைவழியாக மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த மாஸ்டா என்ற நகரின் வழியாகவும், கங்கைப் பெருந் தீவைக் கடந்து, காசிம் பஜாரைச் சேர வேண்டும் நாங்கள்! நாங்கள் புறப்பட்டுப் போகும்போது நடந்த ஒரு முக்கியமான சம்பவத்தை அஸ்ஸாமில் நடந்ததை-கூற விரும்புகிறேன்.

அஸ்ஸாமில் எங்கும் மொழிப் போர் நடந்துகொண்டிருந்தது. பெருவாரியான அஸ்ஸாமியருக்கும், நிரந்தரமாகக் குடியேறிய அஸ்ஸாம் மாகாணக் குடியுரிமை பெற்ற வங்காளிகளுக்கும், மொழிப்பற்று உச்சக் கட்டம் அடைந்து மொழி வெறியாக இருந்த நேரம் அது! திடீரென்று ஒரு இடத்தில் கடைகள் சூறையாடப்படும்; தீ வைக்கப்படும். அடுத்து பல பிணங்கள் தெருவிலே ரத்த வெள்ளத்தில் மிதக்கும்!

இந்தக் கொடூரமான செயல்களும், சம்பவங்களும வங்காளிகளை மிகவும், பீதிகொள்ளச் செய்திருந்தன. இவற்றை அறிந்த வங்காளத்திலுள்ள வங்காளிகள், ஆண்டிமுதல் அரசன் வரை, தன்னுடைய உடன் பிறப்புகள், சந்ததிகள், அஸ்ஸாமில் கொடுமைக்காளாக்கப் படுகிறார்கள், சிதைந்து, நசிவடைகிறார்கள்-அதற்குக் காரணம் அஸ்ஸாமியர்களும், அவர்களுடைய அஸ்ஸாமி மொழி வெறியுமே என்று, அஸ்ஸாமியர்களின் மேல் தாங்கொணு கோபமும் வெறுப்பும், வெறியும், அடைந்திருந்தனர்; மொழியாலும் இனத்தாலும் பிளவுகள், போராட்டங்கள் வெறிச் செயல்கள், நடந்து கொண்டிருந்தன! அந்த நேரத்தில் நாங்கள்ஐந்து பேரும் புறப்பட்டு வங்காளத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தோம்! நாங்கள் ஐந்து பேரும் அஸ்ஸாமியர்கள்தான். ஒருவரும் வங்காளியல்ல. ஆனால், நான் மட்டும் நன்றாகவே வங்காளத்தான் போல வங்காளி மொழி பேசுவேன்! வியாபாரத் தூதுவர் அஸ்ஸாமியும், ஆங்கிலமும் தெரிந்தவர். மற்ற மூவரும் அஸ்ஸாமியைத் தவிர ஏதும் தெரியாதவர்கள்.

எங்களுடைய வாகனம் காலை பத்து மணிவரை மெதுவாகவே சென்று கொண்டிருந்தது! பிறகு கொஞ்சம் வேகப் படுத்தினேன். அதைக்கண்ட வர்தகத் தூதுவர் மாஸ்டாவை தாண்டி வேகமாகச் செலுத்தலாம்'' என்று கூறிவிட்டார்! வழியெல்லாம் கணக்கற்ற வயல் வெளிகளும், சிறிய ஆற்றுப் பாலங்களும், பல உயர்ந்த செழிப்பான மர வகைகளும், சாலை நெடுக எங்களுக்குப் பின்நோக்கி ஓடிக் கொண்டிருந்தன.

பகல் பதினொரு மணியளவில் மாஸ்டாவை அடைந்தோம். அங்கு இறங்கிக் களைப்புத் தீர சிற்றுண்டியும், தேனீரும அருந்திவிட்டு, ஒரு அரைமணி நேர ஓய்விற்குப் பின் வண்டியை மீண்டும் செலுத்திக் கொண்டிருந்தோம். காசிம் பஜாரை நோக்கி ஓடிக் கொண்டிருநதது லாரி.

மாஸ்டாவைத் தாண்டிப் பத்து மைல்கள் ஏறக்குறைய வந்திருக்கலாம் ஒரு சிறு நதி குறுக்கே வந்தது. அதன் பாலததைக் கடந்து மேலே சென்றோம். அந்த சிறு நதி கங்கையில் போய் கலக்கிறது என்று எனக்குத் தெரியும். ஆதலால பக்கத்திலிருந்தவர்களிடம் 'கங்கை நதியை இன்னும கொஞ்ச நேரத்தில் பார்க்கலாம் அருகிலதான் இருக்கிறது'' என்று கூறினேன்.

மேலே அமைந்துள்ள பாலமும், கீழே நீரோடும் நதியும் கண்களைக் கவரும் காட்சியல்லவா? அந்த இன்பகரமான எண்ண அலைகள இன்னும் மறையக்கூட இல்லை. அந்தப பெரிய ஆபத்து, மயிர்க்கால்கள் குத்திட்டு நிற்கும் அளவிற்கு, இதயம இறுகிவிடும அளவிற்கு நேர்ந்து விட்டது! சிற்றாற்று பாலத்தைக் கடந்து ஒரு பர்லாங்கு தூரம் கூடச் செல்லவில்லை. இன்னும் ஒன்று அல்லது ஒன்றரை மணிநேரத்தில ங்கள் நீண்ட பயணம் முடியும்,

அந்த நேரத்தில்...சற்று தூரத்தில் பாதையைக் குறுக்காக எதையோ போட்டு அடைத்து வைத்திருந்தது தெரிந்தது. ஆம் சாலையோரமிருந்த ஒரு பெரிய மரத்தை வெட்டிச் சாலையின் குறுக்காகச் சாய்த்திருந்தது. வண்டியை வேகம் குறைத்து அருகில் சென்று நிறுத்தினேன். ஐந்து பேரும் கீழே இறங்கினோம். மரத்தைப் பார்த்தால், அதை அப்புறப் படுத்தச் சுமார் பத்துப் பதினைந்து பேர்களாவது தேவைப் படும் போல் தெரிந்தது, நாங்கள் எப்படி அதைநகர்த்துவது? யோசனை நீடிக்கவில்லை, திடுதிப்பென்று பாலத்தின் பக்கத்திலிருந்து ஒரு பத்துப் பேர்கள், இளம் வயதினர், வாட்டசாட்டமான காளைப் பருவத்தினர் எதையும்செய்யும் இதயத் துணிவு பெற்றிருந்தவர்கள், அருகில்வந்ததும் அவர்கள் வங்காளிகள் என்று தெரிந்து கொண்டேன்!

''எங்கிருந்து வருகிறீர்கள் நீங்கள்'' என்று ஒரு முரட்டுக் குரல் கர்ஜித்தது. அதற்கு நான்தான் பதில் சொன்னேன்.

''டார்ஜிலிங்கிலிருந்து'' அடுத்த கணம் என்நிலை தடுமாறியது. என் கன்னத்தில் பளார் என்று ஒரு அறை! அதைத் தொடர்ந்து மற்ற எல்லோருக்கும் இதே நிலை ஏற்பட்டது! பெட்ரோல் தொட்டியை இருவர் உடைத்து தீ வைத்தார்கள். எங்கள் உயிரையே காத்துக் கொள்ள முடியாத எங்களால், பற்றி எரியும் பல ஆயிரக் கணக்கான ரூபாய் பெருமான தேயிலை வண்டியை என்ன செய்வது ? எங்களைக் காட்டுத்தனமாகக் கைத் தடியிலும், கையாலும் அடித்து வீழ்த்திவிட்டார்கள்! பிறகு என்ன நடந்தது, மற்ற நால்வருடைய கதி என்ன ஆயிற்று நான் இறந்தேனு ? அல்லது அவர்கள் இறந்து விட்டார்களா? ஓடித் தப்பித்தார்களா ? எனக்கொன்றுமே தெரியவில்லை! எதையும் ஞாபகப் படுத்த முடியாத, ஒருமயக்க நிலை போலும்!

மீண்டும் நான் உணர்வு பெற்ற போது, முழுக்க நனைந்து மண்டையிலும், கால்களிலும், தோள்களிலும் செஞ்சாந்து பூசப்பட்டது போல் எங்கும் குருதி வழிந்து கொண்டிருந்தது என் உடலில்! ஆடையெல்லாம் கிழிந்து, சிவப்பாக நனைந்து ஈரமாக இருந்தது! ஒரு புல் மேட்டில் கிடத்தப் பட்டிருப்பதை உணர்ந்தேன். என்உடலை அசைக்க முடியவில்லை. எங்கும் ஒரே வலி. மண்டை தெறித்தது. மெல்ல கண்களை மட்டும் சுழலவிட்டேன். அழகே உருவெடுத்த இளமங்கை, பருவம் உடலில் மின்ன, தன் புருவத்தை உயர்த்தி என்னை ஆச்சரியப் பார்வையால் நோக்கிக் கொண்டிருந்தாள்! பேச வாயெடுத்தேன் முடியவில்லை! அவளே பேசினுள்:-

''பேச வேண்டாம் இளைப்பாருங்கள். எல்லாம் பிறகு பேசிக் கொள்ளலாம்'' என்று.

ஆகா! அவள் பேச்சு, தேனில் குழைத்த தினையாக இருந்தது! அவள் பேச்சிலிருந்து, அவள் ஒரு வங்காளி என்று தெரிந்து கொண்டேன்! மீண்டும் என் கண்களை அக்கம்பக்கத்தில் சுழல விட்டேன்! இவள் மட்டுமிருக்கிருளா ? இல்லை வேறு யாராவது இருக்கிறார்களா ? யாருமில்லை! மெல்ல கண்ணை மூடிக் கொண்டேன். ஒரு கந்தையால் என் முகத்தைத் துடைத்து, குருதி மேலும் வரவிடாமல் ஒரு கட்டுப் போட்டாள். சிறிது நேரத்திறகுப் பிறகு உணர்வு பெற்று எழுந்து, சுற்று முற்றும் பார்த்தேன். அவள் எங்கே? அதோ எதிரில் வநகிருர். ்ந

குடுவையில் தண்ணீர் கொண்டு வந்தாள்.

''எழுந்து விட்டீர்களா இதைக் குடியுங்கள்'' என்று என்னிடம் தந்தாள். அவளே பேசினுள், இனிக்கப் பேசினுள்.

''என் வீட்டிற்கு வாருங்கள். வீடு பக்கத்தில் தான் இருக்கிறது. வருகிறீர்களா ?''

நோயாளிக்கு வேண்டியது வைத்தியனுடைய மருந்து கால்பாகமானுல் முக்கால் பாகம் அவனுடைய இனிய வார்த்தைகளும், அன்பும் தானே!

ஏதுமற்ற நிலையில் எனக்கு யார் உதவி செய்வார்கள்? உண்மையிலே நான் அவளைத் தெய்வமென நினைத்து மதித்தேன்.

'இந்த அரிய உதவியை நான் என்றுமே மறக்க மாட்டேன்'' என் வாயிலிருந்து பலவீனமானவார்த்தைகளாக வெளிப்பட்டது. அவள் முறுவலித்தாள். மனிதருக்கு மனிதர் உதவி செய்வது இயல்பு தானே என்று குறிப்போ அந்த முறுவலிப்பு! என்னை இரண்டு கைகளாலும் தாங்கிப் பிடித்துக்கொண்டு வந்து அவள் வீட்டில் ஒரு ஓலைப்பாய் மேல் படுக்க வைத்தாள்!

''பேசாமல் படுத்துத் தூங்குங்கள்! நான் கஞ்சிகொண்டு வருகிறேன்'' என்று கூறிவிட்டுப் போனுள். கதை, கட்டுரைகளில் வரும் மாயப் பெண்களைப் படித்திருக்கிறேன், அன்று நேரில் கண்டு சந்தேகப்பட்டேன்! அடுத்துச் சில நிமிடங்களில் சூடான கோதுமைக் கஞ்சியைக்கொண்டு வந்துதந்தாள்-தரவில்லை-ஊட்டினுள்! அப்போது என் கைக்கடிகாரத்தைப் பார்த்தேன்! அது, ஓடிக்கொண்டுதான் இருந்தது. மணி ஏழு எனக் காட்டிற்று! அவளைப் பார்த்தேன். அவளே பேசினுள்.

''நீங்கள் எப்படி அடிபட்டு ஆற்றில் மிதந்து வந்தீர்கள் உங்களை யாராவது அடித்துப் போட்டு விட்டார்களா'' அவளது உள்ளக் கனிவை, அவளின் வட்டவிழிகளிலே தேக்கிச் செவ்வாய் வெடித்து உதிர்த்த மொழிகளிலே கண்டேன்.

''ஆமாம்'' என்று அவளைப் பார்த்துக்கொண்டே தலை ஆட்டினேன்.

''எப்படி'' என்று ஆவல் உந்தப் பட்டவளாகக் கேட்டாள். சிறிது நேரம் பேசாமல் இருந்தேன்! கையிலிருந்த கஞ்சிக் குடுவையை அவளிடம் நீட்டினேன்! அதை வாங்கிப் பக்கத்தில் வைத்துவிட்டு மீண்டும் அதையே கேட்டாள்!

(தொடரும்)

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

# எண்ணம்

மலர் 7 | 19-11-60 | இதழ் 23

## சென்னைச் சாலைகள்

இயற்கை அழுதால்தான் உலகம் செழிக்கும்.

உலகம் செழித்தால்தான் மனிதன் சிரிப்பான்.

வானம் அழவில்லையே என்றுதான் பலர் அழுதார்கள்.

மனிதன் அழுகிறானே என்றுதான் வானமும் அழுதது.

ஆனால்,

வானத்தின் அழுகை, நிதானத்தைக் கடந்துவிட்டது.

பதினெட்டு ஆண்டுகட்கிடையே இப்படியொரு பயங்கரமழை தமிழ்நாட்டில் பெய்ததில்லை.

இந்த மழையால், தென்னாட்டில் பாதிக்கப்பட்ட பகுதிகள் பல.

அதிலும்,

தலைநகரான சென்னை, களையிழந்து அழுது வடிகிறது.

தாழ்ந்த பகுதிகளிலுள்ள குடிசைகளெல்லாம், தண்ணீருக்குள் ஆழ்ந்து கிடக்கின்றன.

பொருட்சேதம் மட்டுமல்ல - உயிர்ச்சேதமும் நடந்திருக்கிறது.

இது, எதிர்பாராததும், தடுக்க முடியாததுமான நிகழ்ச்சியே.

சென்னையில், தாழ்ந்த பகுதிகளிலுள்ள வீடுகள் பாதிக்கப்பட்ட கொடுமையைவிட, உயர்ந்த பகுதிகளிலுள்ள "ரோடுகளும்" பயங்கரமாகப் பாதிக்கப்பட்டு பரிதாபமாகக் காட்சி தருகின்றன.

இதை, மழையினால் விளைந்த சேதம், என்று மட்டுமே சொல்லி விடமுடியாது.

காரணம், 49.74 சதுர மைல்களுக்குள், 20 லட்சத்துக்கும் அதிகமான மக்களை உள்ளடக்கிக் கொண்டிருக்கும் தமிழ்நாட்டின் தலைநகரம் சென்னை.

இங்கே, நிறைந்து வருகிற ஜனத்தொகையையும், பெருகி வருகிற வாகன வசதிகளையும் சமாளிக்கக்கூடிய அளவுக்கு, இருக்கின்ற சாலைகளே பற்றாது.

இந்தப் போக்குவரத்து நெறிசலைத் தவிர்க்க, கூவம் கால் வாயிலும், பக்கிங்காம் கால்வாயிலும் படகுகள் விடலாமே (!) என்று நமதருமை அமைச்சர் காமராசர்கூட அண்மையில் யோசனை கூறினார்கள்.

இந்த நிலையில், இந்த மழையில்,

சாலைகளின் மத்தியில் இருக்கும் "டிராம்" தண்டவாளங்களை யெல்லாம் வெட்டியெடுத்ததினால் ஏற்பட்ட குழிகள் ஒருபக்கம்.

மின்சார இலாகாவினரும், தண்ணீர் துறையினரும் விருப்பத்திற்கு வெட்டிய பள்ளங்கள் ஒருபக்கம்.

வெட்டப்படுகின்ற குழிகள் சரியான முறையில் மூடப்படுவதில்லை.

இதைக் கவனிக்க வேண்டிய பொறுப்புள்ளவர்களும் இதைக் கவனிப்பதில்லை.

புதிய சாலைகள் போடாதது மட்டுமல்ல, பழைய சாலைகளும் பழுது பார்க்கப்படவில்லை.

இதனால், ஊர்ந்து செல்கிற வாகனங்களுக்கு 'அச்சு' ஒடிபடுகிறது.

நடந்து செல்கிற மனிதர்களுக்கு இடுப்பு ஒடிபடுகிறது.

இது, இப்போது சென்னைச் சாலைகளில் வாடிக்கையாக நடந்து வருகின்ற வழக்கமான செய்திகள்தான்.

மக்கள் மாநகராட்சியைக் கேட்கின்றனர்.

மாநகராட்சி மாநில அரசைக் கேட்கிறது.

மாநில அரசோ?

சென்ற ஆண்டுக்கு முந்திய ஆண்டுக்கணக்குப்படியே சென்னை நகரில் மட்டும், ஓடுகின்ற மோட்டார் கார்களும், பஸ்களும், லாரிகளும், டாக்சிகளும் ஆட்டோ ரிக்ஷாக்களுமாகச் சேர்ந்த வாகனங்களின் மொத்த எண்ணிக்கை 18043.

இந்த ஆண்டில் இது வளர்ந்திருக்கிறது.

வாகனங்களுக்காக வரியாகவும், கட்டணமாகவும் சென்னை நகரிலிருந்து மட்டும் மாநில அரசு வசூலிக்கின்ற தொகை, ஆண்டொன்றுக்கு 85 லட்ச ரூபாய்.

இதில் மாநகராட்சி தன் வாகனங்களுக்காகக் கட்டுவது மட்டும் 2 லட்சதது இரண்டாயிரம் ரூபாய்கள்.

57-58-ம் ஆண்டுகளில் சென்னைச் சாலைகளைப் பழுது பார்ப்பதற்காக மாநகராட்சி செலவழித்த பணம் 55 லட்சம் ரூபாய்கள்.

மாநில அரசோ "காம்பன்சேசன்" என்ற பெயரில் மாநகராட்சிக்குக் கொடுத்து வருகிற தொகை ஆண்டுக்கு 3 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய்கள்தான்.

மாநில அரசைப் பலமுறை கேட்டும் பலனளிக்கவில்லையெனக் கூறுகிறார் நகராண்மைக் கழக ஆணையாளர்.

மத்திய அரசிடமிருந்து, தென்னகத்திற்கு ஆலைகளை வாங்கித் தரத்தான் மாநில அரசுக்கு வக்கில்லை, வகையில்லை.

தூர்ந்துபோன சாலைகளைப் புதுப்பிக்கவுமா இவர்களிடம் பணமில்லை, மனமில்லை?

85 லட்சம் ரூபாய்களை வாகன வரியாகக் கொடுத்தும், சென்னைச் சாலைகளில் வாகனகள் செல்ல வழியில்லை.

வாகன வரியைப் பெற்றும், சாலைகளைக் கவனிக்க வழியில்லாத-கவனிக்க வேண்டியவர்களின் வாகனங்களும் இந்த சாலைகளில் செல்வதைத் தவிர வேறு வழியில்லை.

இதை எண்ணியாவது, சாலைகளைச் செப்பனிட்டுக் காக்கக் கடமைப்பட்டவர்கள், அதற்காகவே பொறுப்பேற்றுக் கொண்டவர்கள், அதைச் செய்து முடிக்கும் ஆற்றலும், அதிகாரமும் படைத்தவர்கள், அதற்காகவே வரி வாங்குகிறவர்கள், அதிலிருந்தே சம்பளம் வாங்கிறவர்கள் கொஞ்சம் நல்லெண்ணத்தோடு மண்ணள்ளிப் போட்டு, சென்னைச் சாலைகளில் உண்டாயிருக்கும் 'ஏரி'களைத் தூர்ப்பாராக, உடனடியாக இதைப் பார்ப்பாராக.

—முதல் பக்கத் தொடர்ச்சி—

புறப்படுவோர், மானைப் பார்த்து மயங்கி விழுந்தால், மலர்களைப் பார்த்துச் சொக்கி நின்றால், வேட்டையும் நடக்காது, விரும்பியதும் கிடைக்காது.

அவன் புறப்பட்டது என்னவோ வேட்டைக்குத்தான்.

வேட்டையாடும் நேரமும், தூரமும், அவன் கண்களுக்கு விலகியே போய்க் கொண்டிருந்தன.

வில்லையும் கணையையும் கீழே வைத்தான்.

மெல்ல அமர்ந்தான்.

அவன் கண்கள் கவர்ச்சிகளால் இழுக்கப்பட்டன.

அவனுக்கு தான் ஒரு வேட்டைக்காரன் என்பதை மறந்துவிடுமளவுக்கு ஓய்வு கிடைத்தது.

"தான் வேட்டைக்காரன்" என்பதை நினைத்துக் கொண்டே பாட்டுப் பாட அவனால் முடியவில்லை.

"நீ பாட்டுப் பாடுகிறவனா? வேட்டைக்காரனா?" என்கிற கேள்வி, அவன் இதயத்தில் எழுந்து கொண்டேயிருந்தது.

என் உயிரினும் இனியவர்களே!

அந்தக் கேள்விக்கு அவன், பதில் கண்டுபிடித்து விட்டான்.

அமைதி நிறைந்த உலகம்!

அங்கே ஒரு கயிற்றுக்கட்டிலில், அவன் சாய்ந்துகிடக்கிறான்.

காகங்கள் குஞ்சுகளுக்கு இரை யூட்டுகின்றன.

அவன் உள்ளம் கிளுகிளுக்கிறது.

ஏராளமான காகங்கள் ஒன்றுகூடி விருந்துண்ணப் புறப்படுகின்றன.

அவனுக்குத் தன் இனத்தின் நினைவு வருகிறது.

இனத்தையும் குலத்தையும் நினைத்தபடி அவன் கண்களை மூடிக்கிடக்கிறான்.

ஓர் இலையின் விளிம்பிலிருந்து, ஒரு பனித்துளி மலர்மீது விழுகிறது.

அந்த ஓசைகூட அவன் காதுகளுக்குக் கேட்கிறது.

செண்பகமலர் ஒன்று பூமியில் விழுகிறது

இலட்சக்கணக்கானவர்களின் கையொலியைக் கேட்டுக் கேட்டு மரத்துப்போன அவன் செவிகள், அந்தமெல்லிய மலர்விழும் ஓசையைக் கேட்குமளவுக்கு மென்மையடைந்து விடுகின்றன.

எந்த அமைதியிலிருந்து ஒருநாள் அவன் தப்பியோடி வந்தானோ, அந்த அமைதியிடமே அவன் மீண்டும் போய்ச் சேர்ந்து விடுகிறான்.

உலகம் உருண்டை என்பது எவ்வளவு பெரிய உண்மை.

ஒவ்வொரு மனிதனும் தான் புறப்பட்ட இடத்திற்கு ஒருமுறை திரும்பி வருகிறான்.

பயம் பிறக்கவில்லை.

பழிபாவங்கள் தோன்றவில்லை.

பரபரப்பில்லை.

இங்கேயிருந்து அங்கே, அங்கேயிருந்து இங்கேயென்று இதயம் ஓடவில்லை.

இன்றும் நாளையும் ஒன்றேபோல் தோற்றமளிக்கின்றன.

ஏறும்போது இருந்த மயக்கம் இறங்கும்போது இல்லை.

அது வேண்டும் இது வேண்டுமென்கிற ஆசை முடிந்துவிட்டால், வாழ்க்கை சுவை நிரம்பியதாக ஆகிவிடுகிறது.

ஆசை, அதற்கான முயற்சி, முயற்சியில் பரபரப்பு, பரபரப்போடு பயம், பயத்தில் நாலுபேர் துணை, துணை செய்வோருக்கு உதவி, உதவி செய்வதற்கு விளம்பரம்—

ஒன்றைத் தொடர்ந்து ஒன்று வாழ்விலிருந்து நிம்மதியை அழித்துவிடும் நிலையை விட்டு, அவன் பறந்து விட்டான்.

இறந்துபோனவன் காதுகளுக்கு முன்னால் வீணையை வாசித்தாலென்ன? தாரை தப்பட்டை முழக்கினாலென்ன?

யாவும் ஒன்றே!

சமாதிநிலை பேரறிவின் அடிப்படை.

அங்கிருந்து கிளம்பும் சிந்தனை, பிறரை மெய்சிலிர்க்க வைக்கிறது.

அவற்றைச் சிந்திப்போனுக்கும் மெய்சிலிர்க்கிறது.

உலகத்திலுள்ள அனைவரும் இந்த அமைதியை விரும்புகிறார்கள்.

இந்த அமைதியை எப்படிக் கொண்டுவருவது என்பதில் சண்டை போட்டுக்கொள்கிறார்கள்.

அமைதிக்காகச் சண்டை போடுவதைவிட, சண்டையிடுகிறவனைப் பார்த்துக்கொண்டு அமைதியாக இருப்பவன் நல்ல சேவை செய்கிறான்.

என் நண்பர்களே!

இந்தப் பிச்சையை நீங்கள் அவனுக்கு வழங்கிவிட வேண்டும்.

"எங்கள் குயிலொன்று அதோபறந்து கொண்டிருக்கிறது பார்த்தாயா?'— என்று அவனை உங்கள் நண்பர்களுக்குக்காட்டலாம்.

கூர்ந்து கேளுங்கள்!

பேரிரைச்சலுக்கு நடுவே, அடிதடிகளுக்கு நடுவே குழுவும் குழுவும் மோதிக்கொள்ளும் கூச்சல்களுக்கிடையே, பலவகையான ஒலிகளுக்கு நடுவே, என் நண்பர்களே கூர்ந்து கேளுங்கள்!

ஒரு சிறுபாட்டு உங்கள் காதுகளுக்குக் கேட்கிறதா?

'நான் நானாக, எனக்குள் எனக்காக, என் பொருட்டுத் தனியாக, அடங்கி அமைவுற்றிருக்கிறேன்."

இந்தப் பாடல், உங்கள் காதுகளில் விழுகிறதா?

அதோ அவன்தான் பாடிக்கொண்டிருக்கிறான்.

அவன் இப்படித் தினமும் பாடுவான்

ஒவ்வொரு கட்டத்திலும், அவன் வாழ்வில் ஒவ்வொரு அதிசயம் நடக்கும்.

அந்த அதிசயம் ஒவ்வொன்றும் அவன் நம்மவன் என்று உங்களைச் சொல்ல வைக்கும்.

என் இனிய நண்பர்களே!

உங்கள் இருதயங்களை மூடிக்கொள்ளுங்கள்.

அடுத்த இதழில்
'போய் வருகிறேன்' 3.

# மல்லிகைப்

## 30. நம்பமுடியவில்லையே!

“உனக்கு விஷயமே தெரியாதா? பெரிய ஆளடி நீ! எல்லாந் தெரிந்தவள்போல் காட்டிக்கொண்டாயே. என் அத்தை மகன் இரத்தினசாமி சீமைக்குப் படிக்கப் போயிருந்தார். அவர் இப்போது திரும்பி வருகிறார். அவர் வந்தவுடனேயே திருமண ஏற்பாடுகளைக் கவனிக்கப் போகிறார்கள். இன்னும் ஒரு மாதத்திற்குள் திருமணம் நடந்துவிடும்” என்று மலர்க்கொடி கூறினாள். அப்பொழுது அவள் முகமெல்லாம் இன்ப உணர்ச்சியால் மலர்ந்திருந்தது.

தங்கத்தினால் இந்தச் செய்தியை நம்பவே முடியவில்லை. அப்படியானால், ராஜுவை...? ராஜுவை மலர்க்கொடி காதலிக்கவில்லையா? காதல் ஜோடிகள்போல் அவர்கள் நடந்துகொண்டதெல்லாம் அர்த்தமற்றவை தானா? இவ்வாறு அவளுடைய சிந்தனைப் பொறி இயங்கிக்கொண்டிருந்தது.

“என்னடி தங்கம், பேசாமலிருக்கிறாய்? நாளைக்கு மீனம்பாக்கத்திற்கு வருகிறாயா, இல்லையா?” என்று கேட்டாள் மலர்க்கொடி.

“அப்படியானால் ராஜு..?” என்றாள் தங்கம்.

“அதானே பார்த்தேன். நான் சந்தேகப்பட்டது உண்மையாகிவிட்டது. ராஜு இல்லாமல் தங்கம் வரலாமா? ராஜு நிச்சயம் வருகிறார். அதுமட்டுமல்ல; இலக்கியக் கழகத்தின் சார்பாக என் அத்தானுக்கு மாலையிட்டு வரவேற்புப் பத்திரங்கூட வாசித்தளிக்கப் போகிறார் உன் ராஜு” என்றாள் மலர்க்கொடி.

மலர்க்கொடி பேசிய போக்கு தங்கத்தை மேலும் அதிர வைத்தது.

“மலர்க்கொடி, என்ன பேசுகிறாய்?” என்று கடுமையான குரலில் கேட்டாள் தங்கம் அவள் கடுமையைச் சிறிது புரிந்துகொண்டாள் மலர்க்கொடி.

“ஏண்டி தங்கம்? ஒவ்வொரு தடவையும் நீ அவரை ஏக்கப் பெருமூச்சோடு பார்ப்பதையும் அவருடன் கலகலப்பாகப் பேசாமல், நாணித் திரும்புவதையும் நான் கவனிக்கவில்லையென்று நினைக்கிறாய் அவரைப் பார்த்துக்கொண்டேயிருக்க வேண்டும் என்று நீ ஆசைப்படுவதும், உன் நாணம் அதற்குத் தடை போடுவதும் எனக்கு யூகிக்கத் தெரியாதென்று நினைத்தாய். தங்கம், நானும் ஒரு பெண்தானடி!” என்றாள் மலர்க்கொடி.

தங்கம் இந்த வார்த்தைகளைக் கேட்டதும் மலைத்துப் போய்விட்டாள்

மலர்க்கொடி ராஜுவைக் காதலிக்கிறாள் என்று தான் நினைத்துக்கொண்டிருக்க, தான் ராஜுவைக் காதலிப்பதாக அவள் நினைத்துக்கொண்டிருக்கிறாள். இதில் எது உண்மையென்று அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை. மலர்க்கொடியும் ராஜுவும் கலகலப்பாகப் பழகிய விதம், அவர்கள் ஒருவரையொருவர் காதலிப்பதாக எண்ணும்படி இருந்தது ஆனால், கலகலப்பாகப் பழகாததே காதலுக்குச் சாட்சியென்று மலர்க்கொடி இப்போது சொல்லுகிறாள்.

தன்னைப் பொறுத்தவரையில் சில சமயம் ராஜுவிடம் தன் மனம் பாய்ந்ததைத் தங்கம் மறுக்கமுடியாது. ஆனால், ராஜுவும் மலர்க்கொடியும் காதலர்கள் அல்ல என்பதையும் அவளால் நம்பமுடியவில்லை.

“மலர்க்கொடி. ராஜுவை நீ...” என்று தங்கம் முழுவதும் கேட்காமல் விட்டுவிட்டாள். மலர்க்கொடி ராஜுவை நீ உண்மையில் காதலிக்கவில்லையா? என்று தான் அவள் கேட்க எண்ணினாள். ஆனால், மலர்க்கொடி அந்த அரை குறையான வார்த்தைகளைக் கேட்டு வேறு விதமாகப் பொருள் கொண்டு விட்டாள்.

“ஓ! அவரையும் நான் நேரே கேட்டுவிட்டேன். “உள்ளதைச் சொல்லுங்கள் தங்கத்தை நீங்கள் காதலிக்கிறீர்களா இல்லையா?” என்று அவர் தான் உன்னை நினைத்து நினைத்து உருகுகிறாரே!’ என்றாள் மலக்கொடி.

தங்கத்தின் எண்ணம் கலங்கியது. அவளால் ஒரு நிலையில் நிற்க முடியவில்லை. சுவர் ஓரமாக இருந்த ஒரு நாற்காலிக்குச் சென்று அதில் அவள் சாய்ந்து கொண்டாள். இரவு அவள் கொண்டிருந்த அமைதியை மலர்க்கொடி பறக்கடித்து விட்டாள் தங்கத்தின் நிலையைக் கண்ட மலர்க்கொடி பயந்து விட்டாள். “தங்கம், நான் ஏதும் தவறாகச் சொல்லி விட்டேனா?” என்று அவள் பரிவோடு கேட்டாள்.

“இல்லை, மலர்க்கொடி இல்லை நீ ராஜுவைப் பார்த்தால் சொல்லி விடு. வீணாக அவர் என்னை நினைத்து உருக வேண்டாம் என்று சொல்லி விடு. இந்த உதவியை மட்டும் எனக்குச் செய்!’ என்று ஆயாசத்தோடு கூறினாள் தங்கம்.

மலர்க்கொடிக்கு இது பெரும் வியப்பளித்தது. மேலும்கேள்விகள் கேட்டுத் தங்கத்தைத் துன்புறுத்தக் கூடாதென்று அவள் தீர்மானித்துக் கொண்டாள்.

“தங்கம், அப்படியே சொல்லுகிறேன், நாளை நீயும் இராதாவும் மீனம்பாக்கத்திற்கு அவசியம்வரவேண்டும்!” என்று சொல்லி விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டு விட்டாள்.

தங்கம் அவள் போவதையே வெறித்துப் பார்த்து கொண்டிருந்தாள்.

மலர்க்கொடியும் ராஜுவும் ஒருவரையொருவர் காதலிக்கிறார்கள் என்று அவள் நம்பிக் கொண்டிருந்ததால் தான், முதல் நாள் இரவு தான் இராதாவிற்கு நடராசனை மணம் புரிந்து கொள்வதாக உறுதி கூற முடிந்தது. இப்போதோ அவள் மனம் மீண்டும் குழப்பமடைந்தது. ஆனால், அவள் ராதாவிற்குக் கொடுத்த வாக்குறுதியை மீறவில்லை. ஏற்கனவே முடிவு செய்தபடி தான் தியாக வாழ்வு வாழ்வதென்று உறுதி பூண்டுவிட்டாள். அந்த உறுதியின் பலனாகத்தான் அவள் மலர்க்கொடியிடம், ராஜுவைச் சந்தித்தால் வீணாகத் தன்னை நினைத்து உருக வேண்டாம் என்று சொல்லி விடும்படி வேண்டிக் கொண்டாள்.

அன்று முழுவதும் தங்கம், மீண்டும் தன் மனத்துக்கு வேலை வைக்காத முறையில் வேறு வேலைகளில் சுறுசுறுப்பாக ஈடுபடலானாள். தன் தாயாருக்கு உதவியாகச் சமையல் வேலையில் ஈடுபட்டாள். மாலை நேரம் வந்ததும், ராதாவை அழைத்துக்கொண்டு கடற்கரைக்குப் போனாள். அங்கு ராதாவுடன் ஊர்க் கதைகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்துவிட்டுத் திரும்பினாள். ராதாவின் மன உறுதியைப் பார்க்கும் போதெல்லாம் தங்கத்திற்கு வியப்பாக இருந்தது. ராதாவின் மனவுறுதி கலங்கும்படியாகத்தான் நடந்துகொள்ளவே கூடாது என்று அவள் தன் மனத்திற்குள் அடிக்கடி சொல்லிக்கொண்டாள்.

மறுநாள் மீனம்பாக்கம் விமான நிலையத்திற்குச் செல்வதற்காக அவர்களை அழைத்துச் செல்ல மலர்க்கொடி கார் ஓட்டிக்கொண்டு வந்நாள். அதன் பின் சீட்டில், ராஜு அமர்ந்திருந்தான். மலர்க்கொடி, காரை வெளியில் நிறுத்திவிட்டு வீட்டிற்குள் ஓடி வந்து தங்கத்தையும் ராதாவையும் அழைத்துக் கொண்டு வந்தாள். வந்த வேகத்தில் தங்கமும் ராதாவும் பின் சீட்டில் ஏறுவதற்காகத் திரும்பியவர்கள் அங்கு ராஜுவைக் கண்டவுடன் சட்டென்று முன் பக்கத்துக் கதவைத் திறந்து கொண்டு அதிலே ஏறி உட்கார்ந்து கொண்டார்கள். முன் சீட்டில் மூன்று பெண்களும் நெருங்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். பின் சீட்டில் ராஜு மட்டும் உட்கார்ந்திருந்தான். மலர்க்கொடி மற்ற சந்தர்ப்பங்களாக இருந்தால், ஏதாவது சொல்லி யாராவது ஒருத்தியை-ஏன் தங்கத்தையே பின் சீட்டில் ராஜுவுடன் உட்கார வைத்திருப்பாள். ஆனால், அப்போது அவள் எதுவும் பேசவில்லை.

---

தேவநேயப் பாவாணரைப் பற்றி, ஒரு பத்திரிகை எழுதிய திரிப்புக்கு, அடுத்த இதழ் தென்றலில், தில்லைப் புலவர். தமிழரசு மறுப்பெழுதுகிறார்.

---

எதிரில் காரின் மேற்பகுதியில் நடுமையத்தில் இருந்த சின்னஞ் சிறிய கண்ணாடிக்குள் ராஜுவின் முகம் தெரிந்தது. அதைச் சில சமயங்களில் தங்கம் தற்செயலாகக் கவனிக்க நேர்ந்தது அந்த முகத்தில் எந்தவிதமான கலக்கமோ, துக்கமோ தென்படவில்லை, மலர்க்கொடி இன்னும் தான் சொன்ன விஷயங்களை அவனிடம் சொல்லவில்லை போலிருக்கிறது என்று தங்கம் எண்ணிக்கொண்டாள்.

விமானத்தில் வந்திறங்கிய மலர்க்கொடியின் அத்தை மகன் இரத்தினசாமி அவளுக்கு எந்த விதத்திலும் பொருத்தமானவனாகவே காணப்பட்டான்.

சற்றுச் சிவந்த நிறமாகவும் வாட்டசாட்டமாகவும், வெள்ளையர் உடுப்புகளுடனும் விளங்கிய அவன் நாகரிகப் பாணியில் வளர்ந்து விட்ட மலர்க்கொடிக்கு முற்றிலும் தகுந்த கணவனாகவே இருந்தான்.

விமானத்திலிருந்து இறங்கி நிலையத்துக்குள் வந்து நுழைந்தவுடன் மலர்க்கொடி துள்ளிப் போய் அத்தான் நலமா? என்று மலர் முகத்தோடு நலம் விசாரித்து வரவேற்றாள் அவன், “ஆ! மலர்க்கொடி நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய்' எவ்வளவு பெரியவளாகி விட்டாய்?’ என்று கேட்டுக்கொண்டே ஆசையோடு அவள் கையைப் பிடித்துக் குலுக்கினான். பிறகு அங்கு வந்திருந்த ஒவ்வொருவருடனும் அவன் நலம் விசாரித்துக், கை குலுக்கி அன்போடு பேசினான்.

எல்லோரும் வழக்கறிஞர் வீட்டுக்கு வந்து விருந்துண்டார்கள். அதன்பிறகு விருந்தினர்கள் தத்தம் வீடுகளுக்குத் திரும்பினார்கள். தங்கமும் இராதாவும் ஜமீன்தார் மாளிகைக்கு வந்து சேர்ந்தார்கள்.

மரகத அம்மாள் விமானம் பறந்து வந்ததைப் பற்றியும், மற்ற நிகழ்ச்சிகளைப் பற்றியும் தன் மகளிடமிருந்தும் இராதாவிடமிருந்தும் விசாரித்துத் தெரிந்து கொண்டு பெரும் வியப்படைந்தாள்.

அன்று மாலைவரை தங்கம், ஓய்வில்லாமலே பொழுதைக் கழித்து விட்டாள். ஆனால், இரவு படுக்கைக்குச் சென்ற பிறகு அவள் இதயம் மீண்டும் பலவிதமான சிந்தனைகளில் ஈடுபட்டது திரும்பத் திரும்ப நடராசனும், ராஜுவும் அவள் மனத்திரையிலே வந்து வட்ட மிட்டனர்.

ஒருமுறை தன் உறுதிமொழியை மீறி நடக்கக் கூடாது என்று தங்கம் நினைப்பாள். இன்னொரு முறை தன் வாழ்நாள் முழுவதும் இப்படிப்பட்ட மனப் போராட்டத் தோடு எப்படிக் கழிப்பதென்று எண்ணுவாள். ஒருமுறை பாவம், ராதா! அவள் இன்ப ஆசை நிறைவேறுவிட்டாலும் அவள் இலட்சிய விருப்பமாவது நிறைவேற வேண்டும் என்று கருதுவாள். மீண்டும் நடராசனும் ராஜுவும் ஒன்றாக வந்து நின்று அவள் மனத்தில் கடமை வாழ்வு பெரிதா காதல்வாழ்வு பெரிதா என்ற விவாதத்தைத் துவக்கி வைப்பார்கள். அவள் தன் மனத்திற்கு அறிவுரை கூறுவாள். வீணாக ஏன் அலட்டிக் கொள்கிறாய். நடராசன் தான் உனக்கென்றே பிறந்தவன். நீ வேண்டாமென்று ஓடினாலும் அவன் உன்னை நோக்கியே தள்ளப் படுவான் தன் முயற்சியில்லாவிட்டாலும், காலம் அவனை உன்னிடம் தள்ளிக் கொண்டு வந்து சேர்க்கத்தயங்குவதாகத் தெரியவில்லை. பேசாமல், இனி உன் கணவன் காதலன் எல்லாம் அந்த நடராசன் ஒருவனேயென்ற நினைப்போடிரு! என்று அவள் தன் மனத்தைத் திடப்படுத்திக் கொள்வாள்.

இப்படியே இரவுப் பொழுதெல்லாம் ஒவ்வொன்றாகக் கழிந்தன ஐந்தாறு நாட்கள் சென்ற பிறகு அவளுக்கு நடராசனை ஒரு முறை பார்க்க வேண்டும் போலிருந்தது ஆனால், அவன் எங்கேயிருக்கிறான் என்றுதெரியாததால் என்ன செய்வது? ராதாவிடம், ‘ராதா! நடராசன் எங்கேயிருக்கிறார், தெரியுமா?’ என்று கேட்டாள்.

# பந்தல்

நாரா நாச்சியப்பன்.

'தங்கம், நீதானே அன்று கடிதம் கொடுத்தாய் அதைத்தவிர வேறு எனக்கொன்றும் தெரியாதே!' என்று ராதா கூறிவிட்டாள். உண்மைதானே, எங்கிருந்தாலும் அவளும் தானும் ஒன்ருகவே இருக்கும்போது அவளுக்கு மட்டும் தனக்குத் தெரியாத செய்தி வேறு ஏதேனும் புதிதாகத் தெரிந்து விடவா போகிறது என்று எண்ணினுள் தங்கம்.

நாட்கள் வீண் பொழுதுகளாகக் கழிந்துக்கொண்டிருந்தன தங்கத்திற்குப் பட்டணத்தில் இருந்தது போதும் என்று தோன்றியது. கயிலாய மாமாவிடம், அனுமதி வாங்கிக்கொண்டு நெய்யூருக்குப் போய்விட வேண்டும் என்று எண்ணினுள். அவள் எண்ணியதற்குத் தோதாக அவரே வந்து 'தங்கம் நாளைக்குக் கதலிப்பட்டணம் புறப்படப் போகிறேம் நீ இங்கேயே இருக்கிருயா? எங்களோடு வருகிருயா?'' என்று கேட்டார்.

''வருகிறேன்!' என்று தங்கம் பதில் சொன்னுள்.

''தங்கம், அம்மா தான் அங்கே அப்பாவைமட்டும் தனியாக விட்டுவிட்டு வந்துவிட்டதாக வருத்தப்படுகிருள். நீ இன்னும் கொஞ்ச நாள் இங்கேயே இருந்துவிட்டுப் போனுலென்ன?'' என்று ஜமீந்தாரிணி பெரியம்மாள் கேட்டாள்.

''அம்மா, எனக்கும் அப்பாவைப் பார்க்க வேண்டும்போலிருக்கிறது!'' என்று தங்கம் சொன்னுள்.

மறுநாள் அவர்கள் புறப்படுவதற்கு ஆயத்தம் செய்தார்கள். அன்று மாலை ஜமீந்தாரிணியம்மாள் தங்கத்தையும் இராதாவையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு சைனபஜாருக்குச் சென்ருள். தங்கத்தையும் ராதாவையும் ''இது நல்லாயிருக்கிறதா'' என்று கேட்டு வகை வகையாகப் புடவைகள் துணிமணிகள் வாங்கினுள். எல்லாம் வாங்கியதும் வீட்டுக்குத் திரும்பி வந்தார்கள். மறுநாள் அவர்கள் ரயிலுக்குப் புறப்படும்போது 'தங்கள் சாமான்களோடு ஒரு புது டிரங்குப்பெட்டி இருப்பதைத் தங்கம் கண்டாள்.

அது கயிலாய மாமாவுடையதாக இருக்கும் என்று தங்கம் எண்ணிக்கொண்டாள்.

ஆனுல், அவர்கள் கதலிப்பட்டணம் மாளிகைக்கு வந்து சேர்ந்தபிறகு, எல்லோரும் ஒன்ருக இருக்கையில் கயிலாயம் அந்தப் பெட்டியைத் திறந்தார். அதில் ஜமீந்தாரிணியம்மாள் வாங்கிய புடவை துணிமணிகள் அத்தனையும் இருந்தன. அதில் தனியாக ஒரு சிறு கட்டு இருந்தது. அதைத் தனியாக எடுத்து இராதாவிடம் கொடுத்தார் கயிலாயம்.

''இதெல்லாம் ஜமீந்தாரிணியம்மாளுடைய தாயிற்றே!'' என்று தங்கம் கேட்டாள்.

''தங்கம், ஜமீந்தாரிணியம்மாள் உங்களுக்காக வாங்கியது தான் இவையெல்லாம்'' என்ருர் கயிலாயம். அந்தச் சிறு கட்டை எடுத்து ராதாவிடம் கொடுத்து 'இந்தா. ராதா! ஜமீந்தாரிணியம்மாள் இதையுனக்குக் கொடுக்கச் சொன்னுள்!'' என்ருர்.

ராதா அதை வாங்க மறுத்து விட்டாள். தங்கமும் ஜமீந்தாரிணியம்மாள் நமக்கு ஏன் இதையெல்லாம் வாங்கித் தரவேண்டும்? என்று கோபித்துக் கொண்டாள்.

'அம்மா, அன்புடையவர்கள், தங்கள் அன்பை எப்படியாவதுகாட்டிக் கொள்ளத் துடிப்பது உலகத்து இயற்கை. கண்ணுக்குத்தெரியாத கடவுளுக்குக் கூடச் சர்க்கரையோ சாம்பிராணியோ காண்பித்துத் தங்கள் அன்பைக் காட்டிக் கொள்ளுகிறவர்கள் வாழ்கிற உலகம் இது. மெய் அன்பு வைத்திருந்தால் போதும் என்று எண்ணினுலும், அந்த அன்புடையவர்கள் மனம் அதை எப்படியாவது வெளிப் படுத்தாமல் இருக்கும் வரை அமைதியடைவதில்லை. பெரியவர்கள் களங்கமற்ற அன்புடன் கொடுக்கும் வெகுமதிகளைப் பெற்றுக் கொள்வது இழிவல்ல. என்று கயிலாயம் கூறியபிறகுதான் இரண்டு பெண்களும் அந்தத் துணிமணிகளை ஏற்றுக் கொண்டார்கள்,

கதலிப் பட்டணம் வந்த அன்று பகல் உணவுக்குப் பிறகு, தங்கம் தானும் நெய்யூருக்கு அம்மாவுடனும் இராதாவுடனும் போய் அப்பாவைப் பார்த்து விட்டு வரவேண்டும் என்று சொன்னுள். கயிலாயம் சம்மதித்தார்

கந்தசாமி வாத்தியார் தன் மகளை அன்புடன் வரவேற்ருர். தங்கம், வீடெல்லாம் சுத்தம் செய்து விட்டு மல்லிகைப் பந்தலுக்குப் போனுள். மல்லிகைப்பந்தலில் ஆங்காங்கே அரும்பு ஒன்றிரண்டு பூக்கள்தான் இருந்தன. கீழே எல்லாம் புல்லுப் பூண்டுகள் காடாய் மண்டிக் கிடந்தன அவள் உடனே கீழ்த் தரையைச் சுத்தம் செய்யும் வேலையில் ஈடுபட்டாள்.

அப்போது கந்தசாமி வாத்தியார் அங்கே வந்தார்.

''அப்பா!'' என்று அழைத்துக் கொண்டே அவரை நோக்கி வந்த தங்கம், தன் தந்தை தன்னிடம் ஏதோ பேச எண்ணுகிருர் என்று தெரிந்து கொண்டாள். அவரும் பேச ஆரம்பித்தார்.

''தங்கம், எங்கே உனக்குத் திருமணமே செய்து வைக்காமல் நான் செத்துப் போய்விடுவேனே என்று எண்ணிக்கொண்டிருந்தேன். இப்போது உன் மாமா வந்தவுடன் அந்தக் கவலை என்னை விட்டுப் போய்விட்டது. இன்னும் உன்னைத் திருமணமாகாமல் வைத்துக்கொண்டிருப்பது பொருத்தமில்லை உடனடியாக உனக்குத் திருமணம் செய்துவிட வேண்டும் என்று உன் அம்மாவும் துடியாய் இருக்கிருள். நீ என்னம்மா சொல்லுகிருய்?'' என்று கேட்டார்.

''உங்கள் விருப்பம்போல் செய்யுங்கள் அப்பா!'' என்ருள் தங்கம்.

''அப்படியானுல், மாப்பிள்ளை பார்க்கத் தொடங்கட்டுமா தங்கம்?'' என்று கேட்டார் கந்தசாமி.

''அப்பா...'' என்று மேலே பேச முடியாமல் தயங்கினுள் தங்கம்.

'ஏனம்மா? யாரையும் மனத்துக்குள் நினைத்து வைக்கிருயா? சொல்லம்மா! உன் மனம்போல் செய்து வைக்கிறேன்!'' என்ருர் கந்தசாமி வாத்தியார்.

தங்கம் சொல்லமுடியாமல் திணறினுள். ஏற்கனவே, அவர் நடராசனைத் தனக்குத் திருமணம் செய்து வைக்க இருப்பதாகச் சொன்னபோது அழுத அழுகை இப்போது அவளுக்கு ஞாபகம் வந்தது. அதனுல், இப்போது அவளால் வாய் திறந்து சொல்லமுடியவில்லை.

''அம்மா, உனக்குத் தயக்கமாக இருந்தால், ராதாவிடம் சொல்லம்மா'' என்று சொல்லிவிட்டு அவர் போய்விட்டார்.

அன்று இரவு ராதா மூலமாக மரகத அம்மாள் தங்கத்தின் கருத்தைத் தெரிந்துகொண்டு, அதைக் கந்தசாமி வாத்தியாரிடம் கூறியபோது, அவரால் நம்பவே முடியவில்லை.

''என்ன? நடராசனைத்தான் தங்கம் விரும்புகிருளா? நம்பமுடியவில்லையே! இருந்தாலும், அவனை எங்கே போய்க் கண்டுபிடிப்பது?'' என்று அவர் மரகத அம்மாளிடம் கூறியபோது அவர் நெஞ்சில் வியப்பும் திகைப்பும் நிரம்பியிருந்தன.

— தொடரும் —

## கேளுங்கள்

அடுத்த இதழிலிருந்து, ஆசிரியர் **கண்ணதாசன்** வாசகர்களின்கேள்விகட்குத்தொடர்ந்து பதிலளிக்கிருர்.

## வெண்பாப் போட்டி-11.

★

### திருக்குறள் தென்றல் வெண்பா.

திருக்குறளின் எந்த ஒரு செய்யுளையாவது பின்னிரண்டு அடிகளாக வைத்துக்கொண்டு, அதற்கேற்ற முறையில் வரலாற்றிலிருந்தோ இலக்கியங்களிலிருந்தோ, நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகளிலிருந்தோ சான்றுகளை முன் இரு வரிகளில் அமைத்து எழுதி அனுப்பவும்,

உதாரணம் செய்யுள் வருமாறு :

**நந்தி கலம்பகத்தால் மாண்டகதை நாடறியும்**
**சுந்தரஞ்சேர் தென்குவத்தூர் சோமேசா—முந்தியொரு**
**வில்லே ருழவர் பகைகொளினும் கொள்ளற்க**
**சொல்லே ருழவர் பகை;**

—திருக்குறள் சோமேசர் வெண்பா.

சொல்லே ருழவர் பகைகொளக் கூடாது என்பதற்கு, நந்திவர்மன். தன் தம்பி பாடிய கலம்பகத்தால் மாண்ட கதை சான்ருக சொல்லப்பட்டிருக்கிறது.

நண்பர்கள், இதுபோலவே, தென்றலை முன்னிறுத்தி, அதாவது தென்றலே என விளித்து, வெண்பா எழுதி, அனுப்பவும்.

**இறுதி நாள் 3-12-60.**

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை-6.

## வழி அனுப்புகிறேன் 1.

அவன் புறப்பட்டுவிட்டான்.

துருவநட்சத்திரம் விண்ணிலேயிருந்து விழுந்துவிட்டது.

ஏறுநடைக்கு இலக்கணம் எங்களை விட்டுப் போக முடிவு செய்துவிட்டது.

கோடையிலே கூவுகின்ற குயிலையும், ஓடையிலே துள்ளுகிற கயலையும், பேடையோடு ஆடுகிற மயிலையும் பற்றிப் பாக்கள் எழுதிக் குவித்த பாவலன்தான் புறப்பட்டுவிட்டான்.

இப்படி நடக்காதா! என்று ஏக்கப் பெருமூச்சு விட்டவர்கள், "அப்பொழுதே தெரியும், இவன் இப்படித்தான்" என ஆர்ப்பாரிப்பவர்கள் இப்படி எத்தனையோ பேரை எண்ண வைத்துவிட்ட அவன் புறப்படுகிருன்.

நினைத் நாலே கண்ணீர் வருகிறது!

அவன் பதவி பதவி என அலைந்தானு? பாவேந்தன் என்று தன்னைப் பத்துப்பேர் சொல்லவேண்டும் என்று பரிதவித்தானு பணம், பகட்டு பத்திரிகை பலம் இவற்றைப் பெறுவதற்காக அவன் எவருடைய கண்ணீருக்காவது காரணம் ஆனுனு! இல்லையே! ஆனுலும் அவன் புறப்படுகிருன்.

மனிதனுக்கு நிம்மதி வேண்டும். அது அவனுக்கு இங்கே இல்லை. அவ்வளவுதான். அந்த நிம்மதியைத் தேடி வெளியே செல்கிருன் அவன். அவனுக்கு நான் ஒன்று சொல்லிக் கொள்ளுவேன். அவனுடைய எழுத்துகளிலே தென்றல் கண்டேன். தாவி வரும் புயலைக் கண்டேன். தளிர்க்கொடி மங்கையர் தண்புனலில் ஆடக் கண்டேன். அவனுடைய எழுத்துகளை ஒருமுறை படிப்பேன் இருமுறை படித்ததுண்டு அவன் எழுத்துக்களில் நான் படிக்காதது அவன் எழுதி அச்சேருதது தான் எனக்கு அவன் அருந்தமிழைக் கற்பிக்கும் ஆசானுக இருந்தான்.

'உரிமையுடன் சொல்லுகிறேன்
அவரே என் அண்ணு
உடன்பிறந்தார் இருந்தாலும்
அவரே என் அண்ணு'

என்று என் எண்ணத்திலே பதிந்துவிட்ட கருத்தைப் பாட்டாகப் பாடிக் காட்டினுன் அவன் புறப்படுகிருன். அவன் தேடி அலையும் நிம்மதி வெளியிலேதான் கிடைக்குமென்ருல் விழிகளிலே கண்ணீருடன் அவனுக்கு விடை கொடுக்கிறேன். அவனுக்கு நான் சொல்ல விரும்பிய ஒன்று இது தான். வேறொருவர் சன்னிதானத்திலே அவன் பக்தனுக இல்லாமல் இருக்கும் வரை அவனுடைய பக்தனுக நான் வணங்கும் தெய்வமாகவே அவன் இருப்பான்-ஏழு ஆண்டுகளுக்கு முன்னுல் அவன் எங்கள் குடும்ப வாயிலுக்கு வந்தபோது சிரித்துக்கொண்டு வரவேற்றேன். பிரிவு வாயிலில் அவன் இன்று நிற்கும்போது சிலர் ஆத்திரப்படலாம். சிலர் ஆனந்தப்படலாம். ஆனுல் நான் கண்ணீரும் கம்பலையுமாய் வழி அனுப்புகிறேன். என் நெஞ்சில் நீங்கா இடம் பெற்று இருக்கும் பாவேந்தனுக்கு என் வணக்கம்.

அன்பன்.

இ. சிவகுருநாதன், சுந்தராபுரம்.




12-11-60-ம் தேதி வெளி வந்த தென்றலில் 'போய் வருகிறேன்' என்ற தலைப்பின் கீழ் உள்ள செய்தியைக் கீழ்க்கண்ட ஆசிரியர்களாகிய நாங்கள் கண்டு மிகவும் வருந்துகிருேம். தாங்கள் எழுதிய கட்டுரையிலிருந்து கட்சியிலிருந்து விலகுவதாக அறிகிருேம். தாங்கள் எந்தக் காரணத்தை முன்னிட்டும் எவ்விதமான சூழ்நிலைகள் தங்களைப் பாதித்தாலும் தாங்கள் கட்சியிலிருந்து விலகக்கூடாது. தாங்கள் செய்த முடிவை மாற்றிக்கொண்டு உள்ளத்தை உறுதிப்படுத்திக்கொண்டு கட்சியில் தொடர்ந்து பணியாற்றும்படி கேட்டுக்கொள்ளுகிருேம். தங்களுக்கு அதிகம் சொல்லக்கூடிய தகுதி எங்களுக்கு இல்லை அரசியலிலே பல இக்கட்டான நிகழ்ச்சிகள் நிகழ்வது சாதாரணம். அவைகளுக்கெல்லாம் மனம் வருந்தி விலகுவது உம்போன்ற உள்ள உறுதி படைத்தவருக்கழகல்ல தாங்களே "போற்றுபவர்... நில்லேன் அஞ்சேன்' என்று கூறி அவைகளுக்கேற்ப தாங்கள் அவசியம் நடக்க வேணுமாய் தங்களை மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிருேம்.

வணக்கம்

தி. கெ. வெங்கிடேசன்,
த. வே. வாமதேவன்,
மு. கிருட்டினன்,
இராம. நரசிம்மன்,
திமிரி.

அன்புள்ள,

ஆசிரியர் கண்ணதாசன் அவர்களுக்கு எழுதியது, தங்களுடைய தென்றலில் வந்துள்ள மடலைப் பார்த்தேன். போய்வருகிறேன் என்ற தலைப்பைப் பார்த்து நான் ஒரு நாள் முழுவதும் ஆழ்ந்த கவலையோடு இருந்தேன். ஆகையால் எங்கேயும் போக வேண்டாம். எங்களுடனேயே இருங்கள். அப்படிப் போய்வருவேன் என்ருல் எங்களையும் கூட்டிக் கொண்டு போங்கள்.

இப்படிக்கு.

ஆ. க. பழனிசாமி கணக்காயர்,
திருப்பூர்,

என் இதயம் கவர்ந்த கவிஞருக்கு.

12-11-60 அன்று தங்களின் கிழமை இதழில். "போய் வருகிறேன்" என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையை கண்டு, திடுக்கிட்டேன். படித்து முடிப்பதற்குள் என்னையறியாமலேயே என் கண்கள் கண்ணீரை உதிர்த்து விட்டன. பெருமூச்சு விட்டபடி என் கைக்குட்டையால் கண்ணீரை துடைத்தும் கூட என்துயரம் நிற்கவில்லை. பதிலாக ஒருகேள்வி என்னை சுற்றிநின்று கேலிச் சிரிப்பை சிதறிவிட்டது. சிந்தித்தேன், ஆனுல் என் சித்தம் தெளியவில்லை. அதுதான்நான் எழுதும் வேதனைக் குரல் கலந்த கேள்விக்குறி. தாங்கள் எழுதிய 84வது வரியாகிய உள்ளதை உள்ளபடி சொல்வது எவ்வளவு பெரிய தவறு——— என்பது முதல்———ஊமையாகவே இறந்து விட்டான், என்ற வரி முடியும் வரை எழுதியிருக்கும் தங்கள் எண்ணத்தின் நோக்கம் புரியவில்லை. அதனை விளக்கி என் வேதனையை தீர்க்கவும்.

—ப. சாமிக்கண்ணன் கோவை.

அன்புடையீர் வணக்கம்.

தாங்கள் தென்றலில் "போய் வருகிறேன்" என்ற கடிதம் எழுதினீர்கள். இதைக் கண்டு வருந்துகிறேன். நாம் யாவரும் கொள்கைக்காக வாழ்பவரேயன்றி தனிப்பட்ட மனிதர்களுக்காக வாழ்பவர்கள் அல்ல. தாங்கள் சொந்தப் படத்தில் நண்பர், கணேசன் அவர்களை ஒப்பந்தம் செய்தீர்கள். இதைக் கண்ட சில சினிமாப் பிரியர்கள் தங்களைக் கண்டித்து கடிதம் எழுதி இருக்கக் கூடும். இதற்காக தாங்கள் வருத்தப்பட்டு போய்விடுவேன் எனக் கூறுவது முறையல்ல என தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். 'போற்றுவார் போற்றட்டும் தூற்றுவோர் தூற்றட்டும்" எனக் கருதி தாங்கள் கொள்கைக்காக பணியாற்ற வேண்டுமென்று தாழ்மையுடன்கேட்டுக் கொள்கிறேன்.

— இராமசாமி ஏழுகிணறு.

அன்புள்ள கவிஞர் கண்ணதாசன் அவர்கட்கு.

ஏழை. செ. பாண்டியன் வணக்கம் 12-11-60 இதழ் தென்றலில் நீங்கள் எழுதிய போய் வருகிறேன் என்னும் கடிதத்தைப் படித்தேன். நீங்கள் அந்த கடிதத்தை எழுதுவதற்கு உங்கள் மனம் எவ்வளவு தொல்லைப்பட்டு இருக்கும் என்பது எனக்கு தெரிகிறது. நான் அதை படித்து கண்ணீர் விட்டேன். காரணம் நீங்கள் என் உள்ளத்தில் நீங்கா இடம் பெற்றவர். அதுவும் அல்லாமல் கவிதை ஒவ்வொன்றும் என் இதயத்தில் இடம் பெற்றிருக்கிறது. நீங்கள் எழுதிய கவிதைகளில் என்னை சிந்திக்க வைத்த கவிதைகள் பல, ஆனுல், இன்று நீங்கள் எழுதிய போய் வருகிறேன் என்னும் கடிதம் என்னை அழ வைத்து விட்டது.

நீங்கள் இந்தக் கடிதத்தை அடுத்த வாரமும் எழுதினுல் அதை படிக்கும் வாய்ப்பை பெறுவேனு என்பது சந்தேகத்துக் குரியது. ஏனென்ருல் உங்கள் கடிதம் என்னை உண்ணுவிரதத்தை உண்டாக்கிவிட்டது. அண்ணு! உன் சகோதரன் கேட்கிருன் அதிலும் உன் உயிரே என் உயிர் என இடம் பெற்றிருக்கும் இந்த ஏழையின் இதயக் குமுறலை தடைபடுத்தும் சக்தி உங்கள் கடிதத்துக்குத்தான் இருக்கிறது.

—ஏழை செ. பாண்டியன்,
சென்னை

சென்ற இதழ் போய்வருகிறேன், படித்தேன் உண்மையிலேயே கண்ணீர் வந்து விட்டது. தங்கள் உள்ளத்தை அது காட்டுகிறது அதிலே வெந்து புழுங்கும் இதயம் தெரிகிறது. என்ன செய்வது? எந்த காலத்தில் தமிழர்கள் கூடிக்குலவி பெருமைப் பட்டார்கள்.

நமக்குள்ளே இருக்கின்ற சின்னஞ்சிறு தவறுகளுக்காக பகைமையை பெரிதாக்கிக் கொண்டு பொது எதிரிக்கு இடமளித்து ஏமாந்து போவது இயற்கையாக நிகழ்ந்து வரும் நிகழ்ச்சியல்லவா? இன்று மட்டும் விதிவிலக்கல்லவே'

'போய் வருகிறேன்' படித்தபின்னே என்னுலே எதுவுமே எண்ண முடியவில்லை! உணவும் கொள்ள மறுத்தது. தொண்டை கூட அடைத்தது. 'கல்லக்குடி' போராட்டத்தின் போது தாங்கள் அடிபட்டதுப்-இறந்துவிட்டதாகவே சேதிகள் வெளி வந்ததும் மாற்றூர் நம்முடைய இயக்கத்திலுள்ளவர்களில் அதிகமாக தாக்கி பேசி எழுதியவர்களில் தங்களையே யாகும் அப்படி மாற்றூர் தாக்குதலுக்கும் தயங்காத கொள்கையொன்றையே குறிக்கோளாகக் கொண்டுள்ள தங்களுக்கு உள்ள பெருங்குணம் கூட என் கண்முன்னே வந்து நின்றன.

வெள்ளையத்தேவன் போருக்குபோகும் போது வள்ளியம்மா கதறியழும் காட்சி 'போகாதே போகாதே என்கணவா' என்று கண்ணீர் வடிப்பது போலவே நானும் 'போகாதீர் கவிஞரே போகாதீர்' என்று என் உள்ளம் பதறித் துடிக்கிறேன். என்னுலே இதற்கு மேலே வரைய முடியவில்லை.

—த. செயராமன் உதகை.

## 'நம் நாடு' - வேண்டுகோள்

6-11-60 ல் மதுரையில் கூடிய செயற்குழுவில் நமது இயக்கத்தின் அதிகாரபூர்வமான 'நம் நாடு' நாளிதழைப் பெரிய அளவில் கொண்டுவர வேண்டுமென்றும், அதற்கான அறிக்கையை அடுத்துவரும் பொதுக்குழுவில் வெளியிட்டுச் செயலாளர் தரவேண்டுமென்றும் தீர்மானித்திருப்பதன் விளைவாகவும், அடுத்துவரும் பொதுத் தேர்தல், கழகத்தின் இன்றைய மின்னல் வேக வளர்ச்சியைக் கருதியும் இதழைப் பெரிதாக்க வேண்டுமென்ற முயற்சியில் இறங்குவதற்கான ஊக்கத்தைப் பெறுவதற்கு, மாவட்டச் செயலாளர்களும், வட்டச் செயலாளர்களும், கிளைகளின் செயலாளர்களும், சார்பு மன்றச் செயலாளர்களும். அவரவர்கள் சார்ந்திருக்கின்ற கிளைகள் அல்லது சார்பு மன்றங்கள் 'நம் நாடு' இதழுக்கு ஓராண்டுச் சந்தா அல்லது குறைந்தது அரை ஆண்டுச் சந்தாவை டிசம்பர் முடிவதற்குள் செலுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தால் 1961 மார்ச் முதல் நாளிலேயே பெரிய அளவைக் காணமுடியும் என்ற நம்பிக்கை, இந்த வேண்டுகோளை விடத் தூண்டியது.

'நம் நாடு' தொடக்கத்திலிருந்தே பெரியதாகுமா-பெரியதாகுமா என்று போன பக்கமெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த நண்பர்கள், இன்று எழுத்து மூலமே எழுதிக் கேட்டவண்ணம் உள்ளனர். சிறியது பெரியதாவதுதான் இயற்கை நியதியேதவிர, பெரியது சிறியதாவதில்லை. ஆகவே, நண்பர்கள் இந்தச் சாதாரண உதவியைச் செய்ய வேண்டுமென்று மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அன்பன்
சி. பி. சிற்றரசு

# மலைநாட்டு வானொலியில்

[மலேயா வானொலியின் தனியார் ஒலிபரப்பு நிறுவனமான "ரீடிபியூஷன்" என்ற ஒலிபரப்பு நிறுவனம், "இசைக் கவிஞர்" என்னும் தலைப்பில், கவிஞர் கண்ணதாசனையும் அவர் தம் கவிதைச் சுவையையும்பற்றி 23-10-60ல் அடியிற் காணும் விமர்சன நிகழ்ச்சியை நடத்தியிருக்கிறது. இதை விமர்சனம் செய்தவர் ஜி. ம. மனுவேல் என்ற தமிழ்நாட்டு நண்பர். இருபத்தியிரண்டு ஆண்டுகட்கு முன்னர் இராமநாதபுர மாவட்டத்திலிருந்து மலேயா சென்று, அங்கேயே நிரந்தரமாகத் தங்கியிருப்பவர்; தற்பொழுது மலேயா அரசின் தகவல் இலாகாவில் பிரச்சாரப் படப்பிடிப்பு நிறுவனத்தின் தமிழ்ப்பிரிவு விமர்சகராகப் பணிபுரிவதுடன், ஒலிபரப்பு நிறுவனங்களின் விஷேட நிகழ்ச்சிகளிலும் பங்கு பெற்று வருகிறார்.]

★

**பாட்டு:** 'மழைகூட ஒருநாளில்...' (மாலையிட்ட மங்கை) (நான்கு வரிகள் ஓடிய பின்னர் வெட்டி, பேச்சு முடிந்தவுடன் மீண்டும் பூராவும் ஓடவிடவும்)

**பேச்சு:** இனிமை கொழிக்கும் இந்தத் தமிழ்ப் பாட்டு, இந்தியாவின் அதிகாரப்பூர்வமான மொழிகள் அனைத்திலும் மொழி பெயர்க்கப்பட்டு பரப்பப்பட்டிருக்கிறது. சர்க்கார் சார்புடைய ஒரு அகில இந்திய இலக்கியக் கழகத்தின் தேர்ந்தெடுப்பினால், விளைந்த நற்பயன் இது. காரணம்; இப்பாடலின் உயரிய கவிநயமே. 'மாலையிட்ட மங்கை" என்ற தமிழ்ப் படத்தில் ஒலித்த இப்பாடலை, தற்கால தமிழ்க் கவிஞர்களில் ஒருவரான கண்ணதாசன் இயற்றியிருக்கிறார்-மழலைக்குரலி எம். எஸ் ராஜேஸ்வரி பாடியிருக்கிறார்-பிரபல இரட்டையர்களான விஸ்வநாதன்-ராமமூர்த்தி இசையமைப்புச் செய்திருக்கிறார்கள். குழந்தைச் செல்வத்தின் மகிமையை தாயின் அன்போடு கவிஞர் அழகு ததும்பத் தீட்டியுள்ளதை முழுவதுமாக இப்போது கேட்போம்..."

**பாட்டு:** "மழைகூட ஒருநாளில் தேனாகலாம்..." (பாட்டு முடிந்ததும்)

**பேச்சு:** எளிய சொற்களில்-ஆனால், சந்தச் சுவை பொருந்திய மதுர அமைப்புடன் - கற்பனை வளத்துடன் அமைந்த இம்மாதிரிப் பாடல்களை, தற்காலம் ஏராளமாகப் புனைத்தளிக்கிறார் கண்ணதாசன். தமிழ்சினிமாத் துறையில் சங்கீதம் நுணுக்கமாக -சுகமான போக்கில்-அமைந்துவருவதாகவே நாம் உணருகிறோம். அதே போன்று, அந்த சங்கீதம் சோபிக்கும் வகையில் பாடலாசிரியர்களும் நல்ல சாமர்த்தியம் காட்டி, இலக்கிய மதிப்புள்ள அரிய கவிதைப் படைப்புகளைத் திரையுலகுக்கு வழங்கி வருகிறார்கள். திரைப் பாடல்கள் விஷயத்தில், இந்த மறுமலர்ச்சியின் ஆரம்பக் கர்த்தாவாக நமது கண்ணதாசனையே குறிப்பிட வேண்டும். இசையோடு பாடுவதற்கு பொருந்து வனவாகக் கண்ணதாசன் புதுமையான பாடல்களைப் புனைந்து தருவதால் இந்த நமது "இசைக் கவிஞர்" பட்டியலில் அவரும் இடம் பெற்றதில், துளியும் வியப்படைய ஏதுமில்லை, அல்லவா? இனி, "சகோதரி" என்ற படத்தில், கண்ணதாசனின் பாடல் ஒன்று ஒலித்ததைக் கேட்போம். • ஏவி. எம். சுதர்சனத்தின் இசையமைப்பில், ஆர். பாலசரஸ்வதிதேவி பாடியிருப்பது.

**பாட்டு:** "மலரும் மலரும்..." (சகோதரி)

**பேச்சு:** தமிழ்த் திரைத் துறையில் மட்டுமின்றி, அரசியல், பத்திரிகை, மேடைப் பேச்சு, கதை-வசனம் போன்ற துறைகளிலும் ஒரு சேரச் சிறப்புற்று விளங்கும் "ஒரே' நபர் கண்ணதாசனே என்றுதான் சிந்திக்கும்போது நமக்குத் தோன்றுகிறது. "தென்றல்" என்ற வார ஏட்டையும், "முல்லை" என்ற மாத ஏட்டையும் பல காலம் செவ்வனே நடத்தி வரும் கண்ணதாசன், தமிழக "திராவிட முன்னேற்றக் கழக"த் தலைவர்களில் ஒருவர் என்பதும் யாவரும் அறிந்ததே, அடிநாளில், ஒரு பாடலாசிரியாகத் திரையுலகில் பிரவேசித்த இவர், பின்னர் கதை-வசன கர்த்தாவாகி, தற்போது படத் தயாரிப்பாளராகவும் உயர்ந்து விளங்குகிறார். முன்பு சொன்ன "மாலையிட்ட மங்கையைத் தயாரித்ததுடன், தொடர்ந்து, "சிவகங்கைச் சீமை" என்ற வரலாற்றுப் படத்தைத் தயாரித்து, வெளியிட்டதுடன், இப்போது "கவலையில்லாத மனித"னைச் சொந்தத்தில் உருவாக்கித் தந்திருக்கிறார். இனி, இரண்டாவது சொந்தத் தயாரிப்பான "சிவகங்கைச் சீமை"யில் அவரே தீட்டிய ஒரு பைந்தமிழ்ப் பாடல்-ஏக்கச்சாயை இழையோடும் அந்தப் பிரபலப் பாடலை-பாடகி-நடிகை என். வரலட்சுமியும், பாடகி டி. எஸ். பகவதியும்-திரை இசை இரட்டையர்களின் இசையமைப்பிலே பாடியது.

**பாட்டு:** "தென்றல் வந்து வீசாதோ"-(சிவகங்கைச் சீமை)

**பேச்சு:** கண்ணதாசனின் இயற்கைப் பெயர் "முத்தையா" என்பதாகும். முப்பத்து மூன்று வயது நிரம்பிய அவர், செட்டிமார் நாட்டில், "சிறுகூடல்பட்டி" எனும் ஊரில் பிறந்தவர். பள்ளிப் படிப்பு அதிகமில்லையாயினும், தனிப்பட்ட வகையில் தாமே முயன்றும், பன்மொழிப் புலவரும்-சென்னை தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தற்போதையத் தலைவருமான கா. அப்பாதுரை அவர்களிடம் பாடம் கேட்டும், தமிழ் இலக்கண இலக்கியங்களில் தேர்ந்தவராகத் திகழ்கிறார். முதன்முதலில் சேலம் 'மார்டன் தியேட்டர்சி"ன் கதை இலாகாவில் சேர்ந்து பணியாற்றி, அவர்களது பத்திரிகையான "சண்டமாருத"த்தை ஆசிரியப் பொறுப்பேற்று நடத்தி, திரையுலகுக்கும் தமிழ் எழுத்துலகுக்கும் அறிமுகமானவர் கண்ணதாசன். முதன் முதலில் அவர் பாடல் எழுதிய படம் 'ஜூபிடரி"ன் "கன்னியின் காதலி" என்று தெரிகிறது. இனி, அவரது மூன்றுவது சொந்தத் தயாரிப்பான "கவலையில்லாத மனித"னில் அவர் தீட்டிய பொருள்நிறைந்த பாடல்ஒன்றைக் கேட்போம். நகைச்சுவை நடிகரும் நல்ல பாடகருமான சந்திரபாபு, கதாநாயகனாக அதில் தோன்றி, பாடுகிற அந்தப் பாடலை-அதே திரை இசை இரட்டையர்களே உணர்ச்சி ததும்ப இசையமைத்துள்ளார்கள்.

**பாட்டு:** "பிறக்கும் போதும்......" (கவலையில்லாத மனிதன்)

**பேச்சு:** இசைக் கவிஞர் கண்ணதாசனின் மூத்த சகோதரரும் திரைப்படத்துறையில் ஒரு பெரும் புள்ளி என்பதை நேயர்களில் பலரும் அறிந்திருக்கலாம். ஏ. எல். சீனிவாசன் எனும் அவர், ஏ. எல் எஸ். என்ற பெயரில் பிரபலமாக விளங்குபவர். பட விநியோகத் துறையில் முதலில் புகுந்து, இன்று படத் தயாரிப்பாளராகவே விளங்கும் "ஏ. எல். எஸ்." பிரபல நடிகை பானுமதியின் சொந்த ஸ்டுடியோ "பரணி"யைத் தாமே குத்தகைக்கு எடுத்து நடத்தி வருகிறார். தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சங்கத்தின் தலைவராகவும் உயர்பதவி வகித்து வருகிறார் "ஏ. எல். எஸ்." இனி, நமது கவிஞர் கண்ணதாசன் இயற்றிய "பாகப் பிரிவினை" படப் பாடல். மிகப் பிரபலமாகிவிட்ட அந்தப் பாடலை-விஸ்வநாதன் - ராமமூர்த்தியின் அருமையான இசையமைப்பிலே பி. சுசிலா பாடுகிறார்.

**பாட்டு:** "தங்கத்திலே ஒரு குறை" (பாகப் பிரிவினை.)

**பேச்சு:** நிறையக் குழந்தைச் செல்வம் பெற்ற கவிஞர் கண்ணதாசன் பெரிய சம்சாரி. சினிமாவில் ஒலித்ததைக் காட்டிலும், தனிப்பட்ட வகையில் அவர் இயற்றி ஏடுகளிலும், புத்தக வடிவிலும் பிரசுரமாகியுள்ள பாடல்கள்தான் ஏராளம். அவை, மேலும் கவிச்சுவை நிரம்பித் திகழ்பவை. "கண்ணதாசன் கவிதைகள்" என்ற தனி நூலே வெளி வந்துள்ளது. "மாங்கனி" போன்ற சுவைக் காப்பியங்களையும் தீட்டியுள்ளார். கண்ணதாசன் பாட்டெழுத-விஸ்வநாதன் ராமமூர்த்தி இசையமைப்புச் செய்ய-பிரபல திரைப்படப் பாடகி சுசீலா அதனைப் பாட" என்ற இனிய செயல், தற்காலத் திரையுலகில் ஒரு வழக்கமாகவே வளர்ந்துவிட்டது. இந்த மூத்தரப்பினரும் இப்படி இணைவதால், பிறக்கும் பாட்டுகள் மிக நல்ல வெற்றியுடைவதையும் நாம் காண்கிறோம். இனி, வரப்போகும் பாடல்களில் பல இம்மூவரின் கூட்டுத்தயாரிப்புத்தான. "எங்கள் செல்வி" திரைப் படத்தில் ஒலித்தது இது.

**பாட்டு:** 'சொல்லத்தான் நினைக்கிறேன்" (எங்கள் செல்வி)

**பேச்சு:** கவிஞர் கண்ணதாசன் பாட்டுக்களில், புதுமையைக் காணுமல் இருக்க முடியாது. "படிக்காத மேதை" என்ற படத்தில் அவரது பாடல் ஒன்று ஒலிக்கிறது. "வாழை மரம் படித்ததில்லை-கனி கொடுக்க மறந்ததா? உயர்வான் முகிலும் கற்றதில்லை மழை பொழிய மறந்ததா? என்று-இயற்கையைக் காட்டி, கேள்வி கேட்கும் வரிகள் கொண்டது அந்தப் பாட்டு. கே. பி. மகாதேவன் இசையமைப்பில், மழலைக் குரள் எம். எஸ். ராஜேஸ்வரி பாடிய அந்தப் பாட்டும் நன்கு பிரபலமாகியிருக்கிறது,

**பாட்டு:** "படித்ததனால்" (படிக்காத மேதை)

**பேச்சு:** மகா கவி பாரதியாருக்குப் பிறகு, தமிழ்க் கவிதைத் துறையில் அடியோடு புதிய சாதனைகள் இல்லையென்று சொல்லிவிட முடியாது. புதுவைக் கவி பாரதிதாசனின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, மறுமலர்ச்சிக் கவிஞர்கள் சிலர் தோன்றி, ஓரளவாவது "நற்சாதனை"கள் புரிந்துதான் வருகிறாகள். அவர்களுள், மிகக் குறிப்பிடத் தக்கவராக விளங்குகிறார் நமது கவிஞர்கண்ணதாசன். முன்பு வெளியான "பொன்னி" பத்திரிகை, அவரை நல்ல முறையிலே தமிழகத்திற்கு அறிமுகம் செய்து வைத்தது. சினிமா இசையோடு, அவரது பாடல்கள் வெற்றிகரமாக ஒலிப்பதால், நல்லதொரு ',இசைக் கவிஞரா''கவும் திகழ்கிறார் கண்ணதாசன். இறுதியாக, முதலில் நாம் கேட்ட தாலாட்டு மாதிரியே மற்றொரு தாலாட்டுப் பாடல்-"மகாதேவி" என்ற படத்தில் திரையிசை இரட்டையரின் மதுரமான இசையமைப்பில், அதே ராஜேஸ்வரியும், இடையில் பாலசரஸ்வதிதேவி குழுவினருமாய்ப் பாடும் இந்தப் பாடலில், தமிழ்ச்சொல் நயம் அழகுற அமைந்திருப்பதை, நேயர்களும் அடிக்கடி கேட்டு இன்புற்றிருப்பீர்கள் என்பதை நினைவு படுத்துவதுடன், இன்றைய "இசைக் கவிஞர்" கண்ணதாசன் அறிமுகத்தை முடித்துக்கொள்ளுவோம.

**பாட்டு:** "சிங்காரப் புன்னகை..."-(மகாதேவி)


கவிபாடும் பொற்சிலைகள்
கதை பேசும் சித்திரங்கள்
மணக்கும் பொன்மலர்கள்
மனங்கவரும் கற்பனைகள்

**நீங்கள் பார்த்த துண்டா?**

கண்ணைக் கவர்ந்து கருத்தை யள்ளும்
எண்ண எண்ண இன்ப மணங் கமழும்
அற்புதப் பொன்மலராக உருவாகிறது

தென்றல் பொங்கல் மலர் 1961

உள்ளத் துடிப்பில் எழும் உணர்ச்சி வேகங்களைச் சித்திரிக்கும் அற்புத ஆற்றல்படைத்த தமிழ்நாட்டின் சிறுகதை எழுத்தாளர்கள் மலரில் எழுதுகிறார்கள்.

காலப் போக்கிற்கொப்ப, நாட்டுக்குத் தேவையான அறிவுக் கருவூலங்களைத் தேடிக் கொணர்ந்து வழங்கி மகிழுகின்ற பெரும் பேராசிரியர்கள் அறிஞர்கள் தங்கள் ஆராய்ச்சி முடிவுகளைத் தென்றல் பொங்கல் மலரில் வெளியிட இசைவு தந்துள்ளார்கள்.

பொங்கல் மல்ரை வண்ணமலராக்கிக் காட்ட உறுதியெடுத்துக்கொண்டு ஓவியர்கள் இரவு பகலாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

கருத்தும் கவர்ச்சியும் நிறைந்ததாக மலர் உருவாகிக் கொண்டிருக்கிறது. மற்றவிவரங்கள் பிறகு.

# வெண்பாப் போட்டி

## புலிநடுங்கித் தஞ்சம் புகல்.

தக்கநற் றெண்டால், தமிழ்மொழியைப் பேணுவதால்,
எக்கணமும் மக்கணலம் எண்ணுவதால், - மிக்க
வலியறிந் திக்கழகம் வாய்த்ததிரா சாசிப்
புலிநடுங்கித் தஞ்சம் புகல்.

**—புதுக்கோட்டை அன்புடை நம்பி, திருமயம்.**

விடுதலை வீரர்களை வெஞ்சிறையிற் போட்டும்,
கடுகளவும் நெஞ்சங் கலங்கார் - கொடுமை
மலியரசிற் கென்றும் மனநடுங்கார் ! உண்டோ
புலிநடுங்கித் தஞ்சம் புகல்.

**—பொன் முருகுமணியடியான், கோதைமங்கலம்.**

பொங்கும் எரிமலை பூநீரால் நிற்குமோ ?
சிங்கம் சிறுநரிக்(கு) அஞ்சுமோ ? - தங்க
எழிற்றமிழ் அஞ்சுமோஇந் திக்கு?பூனைக்(கு) உண்டோ
புலிநடுங்கித் தஞ்சம் புகல் ?

**—ப குருதேவன், தேவதானப்பட்டி.**

புருவச் சிலைமேற் பொலிவுநா ணேற்றிப்
பொருவிழியைப் பூட்டிநீ எய்தால் - பருவ
ஒளிமுத்தே ! காண்பாம் உனதடியில் வீரப்
புலிநடுங்கித் தஞ்சம் புகல்.

**—செல்வப், கோவை.**

நம்மருந் 'தந்தை'யினை நாடுவிட் டோடென்று
இம்மண்ணில் நின்றுநேரு ஏசினுர் - நந்தம்
வலியறியார் கூறட்டும் வையகத்தில் உண்டோ
புலிநடுங்கித் தஞ்சம் புகல்.

**—வில்லன்கோதை, காஞ்சிபுரம்.**

நின்றெதிர்த்த ஆரியரின் நெஞ்சம் கலங்கிடவே
அன்றெதிர்த்தார் செந்தமிழர் ! ஆனதினுல் - இன்று
எலிவீரர் முன்னுலே எவ்வாறு வீரப்
புலிநடுங்கித் தஞ்சம் புகல்.

**—கோபதிவிரண்ணு, சித்தையங்கோட்டை.**

கலைமிடுக்குக் கொண்ட கனித்தமிழ் நாட்டார்
குலைநடுக்கங் கொள்வரோ இந்திச்(கு) - எலிஅடக்கி
மலைநடுக்கங் கொள்வதும் மண்ணிலுணடோ ? உண்டோ
புலிநடுங்கித் தஞ்சம் புகல்.

**—அ மனப்போக்கன். சென்னை-23.**

வெல்லும் துணிவிருக்க. வெங்கொடுமை நஞ்சினத்தைக்
கொல்லும் வலிவிருக்கக், குன்ருது - செல்லும்
பொலிவிருக்க, வாழ்விருக்கப் பூமிதனில் உண்டோ
புலிநடுங்கித் தஞ்சம் புகல்.

**— அ வே. காசிநாதன், மணவாசி.**

தன்மானம் உள்ளவர்கள் தாழ்ந்தாலும் தம்பசிக்கு
என்றும் இரந்துண்ண எண்ணுர்காண் ! - வென்ற
வலிகெட்ட போதுமிலை வால்குழைக்கும் நாய்க்குப்
புலிநடுங்கித் தஞ்சம் புகல்.

**— க. பொ இளர்வழுதி, கலிதீர்த்தான்குப்பம்.**

உழைத்துச் சிவந்த கரம்ஒடுக்கி உள்ளம்
பிழைத்துப் பிழைப்பார் பிழையை - அழித்துத்
தொலைக்கின்ற காலம் தொலைவில்லை; இல்லை
புலிநடுங்கித் தஞ்சம் புகல்.

**—மரு. பரமகுரு, காரைக்குடி.**

அஞ்சிப் பிழைத்ததுண்டோ ஆண்மையற்று நின்றதுண்டோ
வெஞ்சமரில் தோல்வியுற்று வீழ்ந்ததுண்டோ - நெஞ்சே
பழிசுமந்து வாழ்ந்ததுண்டோ பைந்தமிழர்; உண்டோ
புலிநடுங்கித் தஞ்சம் புகல்.

**—குகன் குருசாமி, கமுதி,**

மானம் அழிந்தபின் வாழாத செந்தமிழன்
ஈனப் புலையர்தலை ஏற்பானே ? - கானில்
வலியில் பிறவுயிர்முன் மற்றென்றும் உண்டோ ?
புலிநடுங்கித் தஞ்சம் புகல்.

**- சி. தணலன், தச்சம்பத்து.**

ஏரார் தமிழர், இழிவடவர் ஆட்சியிலே
சீரின்றி வாடிச் சிறுமையுற்ருர் ! - வீரக்
கலைகண்ட செந்தமிழா ! கண்டதுண்டோ, பாரிற்
புலிநடுங்கித் தஞ்சம் புகல்.

**—பனே. பழநியப்பன், மேலைச்சிவபுரி.**

அங்கயற்கண், விற்புருவம், ஆர்வமொழி செங்குமுதம்,
தங்கநிற அங்கத் தளிரேகாண் - அங்கே
களிமிகு நின்வதனங் கண்டதும்கா ரில்;அம்
புலிநடுங்கித் தஞ்சம் புகல்.

**—கொண்டிசின்னு, இராமசாமி, மேலைச்சிவரி.**

பண்டைத் தமிழ்க்குலத்தின் பண்பெங்கே ? வீறெங்கே ?
மண்டு புகழெங்கே ? வாழ்வெங்கே ? - திண்டோள்
வலியெங்கே ? அஞ்சேல் வடவர்க்கு; நன்ருே
புலிநடுங்கித் தஞ்சம் புகல்.

**—இரா. கலைமணி. வீரபாண்டி.**

புறம்கண்ட தென்னகத்தார் போர்க்கோலம் பூண்டால்
புறங்காட்டி ஓடுவரோ ? போகார்; - திறங்கொள்
புலிநிகர்த்தோர் அஞ்சுவரோ புல்லர்க்கு; உண்டோ
புலிநடுங்கித் தஞ்சம் புகல்.

**— ந இராமசாமி, சித்தையன்கோட்டை.**

தோளில் வலுவிருக்கத், தூய்மை உளத்திருக்கக்,
கீழாம் வடக்கின் கெடுமதி யாளர்
வலிகண்டு யாமஞ்சோம். வையகத்தில் உண்டோ
புலிநடுங்கித் தஞ்சம் புகல்.

**—வேலன், கல்லிடைக்குறிச்சி.**

கொத்தடிமை தீரக் கொதித்தெழுவாய் தென்னவனே !
எத்தர்தம் ஆட்சி இனியுமேன் ? - மெத்த
வலியிருந்தும் ஏனோ எலியினிடம் வீரப்
புலிநடுங்கித் தஞ்சம் புகல். **—ப. வே. இராமசாமி, மதுரை 2.**

**முழுமை நிலா ! அழகு நிலா !**
**முளைத்ததுவிண்மேலே — அது**
**பழமையிலே புதுநினைவு**
**பாய்ந்தெழுந்தாற்போலே !**




**(பல்சுவைத் திங்களிதழ்)**

ஆசிரியர் :
**ஆரூர். சொ. ஆனந்தன்.,** பி. எஸ். சி., (எம்.ஐ.டி.)

பதிப்பாசிரியர் :
**வெ. நாமதேவன்.** பி ஏ,

கவிஞர் கண்ணதாசன் கவிதைக்கு எழில் சேர்க்கும்
கண்கவர் மூவண்ண முகப்பு

டாக்டர் மு வ, டாக்டர் சிதம்பரநாதன், முரசொலி மாறன், அகிலன், நாரா நாச்சியப்பன், சாண்டில்யன், தமிழ்வாணன், கோமதி சுவாமிநாதன், பி சி. கணேசன்., கி. வா. ஜகந்நாதன், ஆகியோரின் எண்ணத்தில் பூத்த

**வண்ணமலர்கள் குலுங்கிச்சிரிக்கும்**
**புதுமைப் பூங்கா !**

**புத்தொழில் கொழிக்கும் முத்தமிழ்ப் பூம்பொழில் !!**

(டிசம்பர் பௌர்ணமியன்று நடக்கவிருக்கும் வெளியீட்டு விழாவில் கவிஞர் கண்ணதாசன் கலந்து கொண்டு சிறப்பிப்பார்.)

தனி இதழ் 25 காசு ; ஆண்டுச் சந்தா ரூ. 3.
தொலைபேசி எண். 62612 முழுமதி-சென்னை-29.

**ஆசிரியர் :** கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர் : இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு
தொலைபேசி எண் 83510,